Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MARCH 16, 2022

புதன்கிழமை மார்ச் 16, 2022 | ஒளி: 07 கதிர்: 257 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## தடை



எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் வாகனங்களைத் தவிர, கேன்கள் மற்றும் பெரல்களுக்கு எரிபொருட்களை நிரப்ப வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பிலான அறிவுறுத்தல், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால், எரிபொருள் நிரம்பும் நிலையங்களின்

தொடர்ச்சி P2



# “கோட்டாவே வீட்டுக்குப் போ”

**தலையிலும் ஆடைகளிலும் வாசகத்துடன் போராட்டம்**

**துன்பத்துக்கு ராஜபக்ஷர்களே பொறுப்பு**

**காலி முகத்திடல் மக்களால் கரைபுரண்டது**

**ஜனாதிபதி செயலகத்துக்குள் சவப்பெட்டியை வீசினர்**

‘நாடு நாசம்; நாட்டைக் கட்டியெழுப்புவோம்’ என்ற தொனிப்பொருளில் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் அரசாங்கத்துக்கு எதிராக ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம்,

தொடர்ச்சி P2

## நிதியுதவி பெற இந்தியாவுக்கு மனைவியுடன் பறந்தார் பசில்

**இந்தியவினால் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடன் வசதியை நீட்டிப்பதற்காக ஆராய்ந்தனர்**

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, நிதியமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல ஆகியோர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக, இந்தியாவின் புதுடெல்லிக்கு நேற்று (15) பிற்பகல் பயணமானார்கள். அவர்களுடன் அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் மனைவி புஷ்பா ராஜபக்ஷவும் பயணித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கருக்கும் நிதியமைச்சர் பசில்

தொடர்ச்சி P2



## டொலர் விலை எகிறியது

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற வணிக வங்கிகளில் அமெரிக்க டொலர் ஒன்றுக்கான விற்பனை விலை, 275 ரூபாயாக நேற்றையதினம் (15) காணப்பட்டது.

இலங்கையின் வர்த்தக வங்கிகளால் நேற்றுமுன்தினம் (14) அமெரிக்க டொலரொன்று 265 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டிருந்த நிலையில், 10 ரூபாய் அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2





## உள்ளூர் மதுபான விலைகள் அதிகரிப்பு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மதுபான வகைகளின் விலைகள், நேற்று (15) முதல் அமலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

750 மில்லி லீற்றர் எக்ஸ்டா ஸ்பெஷல் 100 ரூபாவாலும், 375 மில்லி லீற்றர் 60 ரூபாவாலும் 180 மில்லி லீற்றர் 30 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் சகல வகையான பியர்களும் போத்தல் ஒன்றுக்கு 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.



## ரயில் கட்டணங்களில் விரைவில் திருத்தம்

**பஸ் கட்டணத்தில் மூன்றுக்கு ஒன்று அடிப்படையிலேயே ரயில் கட்டணம் அறவிடப்படுகிறது**

■ *மகேஸ்வரி விஜயனந்தன்*

டீசலின் விலை 55 ரூபாயால் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ரயில் கட்டணத்தில் சிறிதளவேனும் மறுசீரமைப்பை மேற்கொள்ளாதவிடத்து, ரயில் திணைக்களத்துக்கு டீசல் கொள்வனவு செய்வதில் நெருக்கடி நிலை ஏற்படுமெனத் தெரிவித்த போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம, ரயில் கட்டணங்களில் திருத்தங்கள் செய்யப்படும் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (15) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### மசகு எண்ணெய் இறக்குமதி ஒப்பந்தத்தை

## UAE நிறுவனத்துக்கு வழங்கத் தீர்மானம்

**ஐக்கிய அரபு இராச்சியத்தின் கொரல் எனேர்ஜி டி.எம்.சீ.சீ கம்பனிக்கு வழங்குவதற்கு பரிந்துரைப்பு**

ஏழு மாத காலப்பகுதிக்கான மசகு எண்ணெய் இறக்குமதிக்கான நீண்டகால ஒப்பந்தத்தை ஐக்கிய அரபு இராச்சியத்தின் நிறுவனத்துக்கு வழங்க, அமைச்சரவை தீர்மானித்துள்ளது. 2022 ஜூன் 1ஆம் திகதி தொடக்கம், 2022 டிசெம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கே இவ்வொப்பந்தம் வழங்கப்படவுள்ளது.

அந்த ஏழு மாதகாலப்பகுதிக்கான மசகு எண்ணெய் இறக்குமதிக்கான பெறுகைக் கோரலுக்கான நீண்டகால ஒப்பந்தத்தை வழங்குவதற்கான விலைமுறிகள் கோரப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

### தேசிய பொருளாதார பேரவை:

## ஆலோசனைக் குழுவில் சிறுபான்மையினர் உள்ளடக்கம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட 11 பேர் அடங்கிய தேசிய பொருளாதார பேரவைக்கு ஆலோசனை வழங்குவதற்காக 14 பேர் கொண்ட ஆலோசனைக் குழுவொன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

பேராசிரியர் எச்.பி கருணாரத்ன, பேராசிரியர் ஷிரந்த ஹீன்கெந்த, டொக்டர். (செல்வி) துஷ்னி வீரகோன்,

தொடர்ச்சி P2

### மனிதன் உருவாக்கிய நெருக்கடியால்

## மக்கள் வரிசையில் நின்று அவதி



மனிதனால் உருவாக்கப்பட்ட நெருக்கடியால், மக்கள் வரிசையில் நின்று அவதிப்படுகின்றனர் என எரிசக்தி அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, நேற்று (15) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### காணாமல் போனோரின் உறவுகளுக்கு

## இலட்சம் ரூபாய் இழப்பீடு

**சான்றிதழ் பெற்றோருக்கு ஒரு முறை மாத்திரம் வழங்க அனுமதி**

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தால் கண்டறிப்பட்ட விடயங்களின் அடிப்படையில், பதிவாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட காணக்கிடைக்கவில்லை எனும் சான்றிதழைப் பெற்றுள்ள காணாமல் போன நபரின் நெருங்கிய

தொடர்ச்சி P2



## சந்திப்பு...

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் சிலர், கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (15) முற்பகல் சந்தித்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி சாங்யோங் ரீ, பிரதிப் பணிப்பாளர் கலாநிதி ஏன் மெரீ கல்டே வூல்ஃப், சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான வதிவிடப் பிரதிநிதி கலாநிதி டுபாகஸ் பெரிடானுஸெட்யாவான் ஆகியோர் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர்.

## ஐ.எம்.எப் உடன் அடுத்தமாதம் பேச்சு

**ரமேஸ் பத்திரண தெரிவிப்பு**

■ *மகேஸ்வரி விஜயனந்தன்*



சர்வதேச நாணய நிதியத்திடம் தொழில்நுட்ப உதவியைப் பெறுவதற்கும் சர்வதேச நாணய நிதியத்திடம் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் பெறுவது தொடர்பிலும் அமைச்சரவை சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான ரமேஸ் பத்திரண, இதற்குத் தேவையான கொள்கை ரீதியான இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும் இது தொடர்பான

தொடர்ச்சி P2

### முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில்

## மின்வெட்டு இல்லை

**மின்வெட்டால் முதலீட்டாளர் வருகை தடைப்படுகிறது**

இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்குவகிக்கும், முதலீட்டு ஊக்குவிப்பு சபைக்குட்பட்ட வர்த்தக வலயங்களிலுள்ள தொழிற்சாலைகளில் நாளாந்த மின்வெட்டு அமல்படுத்தப்படமாட்டாது என மின்சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

முதலீட்டு சபையின் கீழுள்ள 14 வர்த்தக வலயங்களிலுள்ள தொழிற்சாலைகளில் மின்வெட்டு அமல்படுத்தப்படுவதால் உற்பத்தியைத் தொடர முடியாதுள்ளதாகவும் சபையின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி–கூட்டமைப்பு சந்திப்பு 10 நாள்களுக்கு பிற்போடப்பட்டது

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையில் முன்னெடுக்கப்படவிருந்த சந்திப்பு, மூன்றாவது முறையாகவும் நேற்று (15) ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# ‘கோட்டாவே வீட்டுக்குப் போ’

நேற்று (15) பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமாகி, மக்கள் வெள்ளத்துடன் ஜனாதிபதி செயலகத்தை அடைந்து, செயலகத்துக்கு முன்பாக மாபெரும் எதிர்ப்பை வெளிக்காட்டியது.

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைக்கு ஒரு மாதத்துக்குள் தீர்வை வழங்குமாறு கோரியே போராட்டத்தை கொழும்பின் பல இடங்களிலும் இருந்து ஜனாதிபதி செயலகத்தை நோக்கி பேரணியாக, எதிர்க்கட்சி ஆரம்பித்திருந்தது.

கடும் பட்டாசு வெடிப்புகளுடன் ஆரம்பிக்கப்பட்ட பேரணியில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு முன்பாக இணைந்த போது காதைக் கிழிக்கும் அளவுக்கு பட்டாசு சத்தம் கேட்டது.

பேரணியில் கலந்து கொண்டோர், ‘வீட்டுக்குப் போ கோட்டா’ என்ற வாசகத்தை தலையில் கட்டியிருந்ததுடன், பெரும்பாலான பெண்கள் தமது சேலைகளிலும் அந்த வாசகத்தை ஒட்டியிருந்தனர்.

வெற்று சவப் பெட்டிகளையும் கொண்டு வந்திருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், பேரணி ஜனாதிபதி செயலகத்தை அடைந்தபோது, செயலகத்துக்குள் அவற்றை வீசியெறிந்தனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற போது ஜனாதிபதி செயலகத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு காணப்பட்டதுடன், ஆர்ப்பாட்டக்காரர்களும் பொலிஸ் தடைகளை உடைத்து வளாகத்துக்குள் செல்ல முயற்சிகளை மேற்கொண்டனர்.

அப்போது அங்கு அமைதியின்மை ஏற்பட்டதுடன், பெருந்திரளான பொலிஸார், கலகம் அடக்கும் படையினர், விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் நிலைமை கைமீறாமல் இருக்க, கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டனர்.

போராட்டக்காரர்கள் மத்தியில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதற்கான நோக்கத்தை நிறைவேற்ற முடியாவிட்டால், நாட்டை எங்களிடம் கொடுக்கலாம் என, போராட்டக்காரர்களிடம் தெரிவித்தார்.

நிவாரணம் வழங்குவதாக வாக்குறுதியளித்த அரசாங்கம், மக்களுக்கு சுமையை மட்டுமே கொண்டு வந்துள்ளது. வீட்டுக்குச் செல்லுங்கள் அல்லது ஜனாதிபதி தேர்தலில் மக்கள் தீர்மானிக்க அனுமதியுங்கள் என அரசாங்கத்துக்கு விடுத்த செய்தியில் சஜித் தெளிவாகக் கூறினார்.

இனியும் இந்தத் துன்பத்தை எங்களால் தாங்க முடியாது என்று ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்களின் முன்னிலையில் முழக்கமிட்டார்.

துன்பங்களுக்கு ராஜபக்ஷ அரசாங்கமும் ராஜபக்ஷ குடும்பமும் பொறுப்பு என்றும் அவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கான நேரம் இது என்றும் இந்த நாட்டை சீரழித்த அரசாங்கத்தை வீட்டுக்கு செல்லுங்கள் என்று சொல்ல நாங்கள் இங்கு வந்துள்ளோம் என்றார்.

இந்த எதிர்ப்பு பேரணியில் ஐக்கிய ஊழியர் சங்கம், ஐக்கிய மகளிர் அமைப்பு, சிவில் அமைப்புகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்தனர்.

## நிதியுதவி பெற இந்தியாவுக்கு மனைவியுடன் பறந்தார் பசில்

ராஜபக்ஷவுக்கும், கடந்த திங்கட்கிழமை (07) பிற்பகல் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலையடுத்து, அமைச்சர் பசிலின் இந்தியாவுக்கான விஜயம் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த உரையாடலில் அத்தியாவசியப் பொருட்கள், மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான இந்தியாவால் 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதியை நீட்டிப்பதற்காக ஆராய்ந்தனர்.

இதனையடுத்து இந்த மாதத்தின் இரண்டாவது பாதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஏற்கெனவே அறிவித்திருந்தது.

இலங்கைக்கு சாத்தியமான அனைத்து வழிகளிலும் உதவ இந்தியா தயாராக இருப்பதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் உறுதியளித்துள்ளார் என உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை அடுத்தவாரம் இந்தியாவுக்கு வரவேற்பதற்கு ஆவலுடன் காத்திருக்கின்றோம். இந்தியா-இலங்கை இடையிலான பொருளாதார பங்குடைமையை மேலும் வலுவாக்குவதற்கான தற்போதைய முயற்சிகளை அவரது விஜயம் வலுவூட்டும் என்பது குறிப்பிடத்தக்கது என, உயர்ஸ்தானிகராலம் சனிக்கிழமை (12) பதிவிட்ட டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டிருந்தது.

## டொலர் விலை எகிறியது

ஒரு அமெரிக்க டொலரின் கொள்முதல் விலையை 259.76 ரூபாயாகவும் விற்பனை விலையை 269.99 ரூபாயாகவும் இலங்கை மத்திய வங்கி நேற்று (15) உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ள போதும் அனுமதி பெற்ற வங்கிகளின் ஓர் அமெரிக்க டொலருக்கான விற்பனை விலை 275 ரூபாயாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (11) ஓர் அமெரிக்க டொலரின் விற்பனை விலை 260 ரூபாயாக காணப்பட்ட நிலையில் பெறுமதி மேலும் உயர்ந்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றுக்கான இலங்கை ரூபாயை 230 ஆக மிதக்க விடுவதற்கு தீர்மானத்துள்ளதாக மத்திய வங்கி அண்மையில் அறிவித்திருந்த நிலையிலேயே மேற்குறிப்பிட்ட விற்கும் விலைகள் அறிவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## UAE நிறுவனத்துக்கு வழங்கத் தீர்மானம்

குறித்த பெறுகையை ஐக்கிய அரபு இராச்சியத்தின் கொரல் எனேர்ஜி டீ.எம்.சீ.சீ கம்பனிக்கு வழங்குவதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அப்பரிந்துரைகளின் பிரகாரம் குறித்த பெறுகையை அக்கம்பனிக்கு வழங்குவதற்காக எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே சமர்ப்பித்த அமைச்சரவை யோசனைக்கே அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## மக்கள் வரிசையில் நின்று அவதி

நேற்று (15) பிற்பகல் அவர் வெளியிட்ட டுவிட்டர் பதிவிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன், அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தாவது,

கடந்த வருடம் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை அரசாங்கம் கட்டுப்படுத்தியிருந்தால், மக்கள் இப்போது வரிசையில் நின்று அவதிப்பட்டிருக்க மாட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

## ரயில் கட்டணங்களில் விரைவில் திருத்தம்

தொடர்ந்து தெரிவித்த அவர்,

“எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட போதெல்லாம், ரயில் கட்டணங்களை அதிகரிக்க எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. சலுகை அடிப்படையிலேயே, ரயில் சேவையை மக்களுக்கு வழங்கி வருகின்றோம்” என்றார்.

அதாவது பஸ் கட்டணத்தில் மூன்றுக்கு ஒன்று என்றடிப்படையிலேயே ரயில் கட்டணத்தை அறவிடுகின்றோம். பருவகால சீட்டுகளுக்கு அதேயளவு கட்டணமே அறவிடப்படுகின்றது. ஏனெனில், பருவகால சீட்டை வைத்திருப்பவர்கள் அதிகம் என்றார்.

கடந்த நாள்களில் ஏற்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்பை தொடர்ந்து, பஸ் கட்டணங்களில் மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. பஸ் உரிமையாளர் சங்கத்துடனான நீண்ட கலந்துரையாடலின் பின்னர் முடியுமானவரை குறைந்தளவு பஸ் கட்டணத்தை மறுசீரமைத்துள்ளோம்.

இதற்கமைய, ஆகக்குறைந்த பஸ் கட்டணத்தை மூன்று ரூபாவால் அதிகரிக்க, அதாவது குறைந்த கட்டணமாக இருந்த 17 ரூபாய் கட்டணத்தை 20 ஆக அதிகரிக்க அமைச்சரைவை அனுமதி வழங்கியுள்ளதுடன், பஸ் கட்டணத்தை 15 சதவீதத்தால் அதிகரிப்பதற்கும் அனுமதி வழங்கியுள்ளது என்றார்.

## தடை



நிர்வாகத்தினருக்கு அனுப்பிவை வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சட்டத்தை மீறும் வகையில் செயற்படும். எரிபொருள் நிரப்பும் விநியோகஸ்தர்களுக்கு எதிராக பொலிஸாரால் சட்டரீதியில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இது தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

## ஆலோசனைக் குழுவில் சிறுபான்மையினர் உள்ளடக்கம்

தம்மிக்க பெரேரா, கிரிஷான் பாலேந்திரா, அஷ்ரப் உமர், டொக்டர் ஹன்ஸ் விஜேசூரிய, விஷ் கோவிந்தசாமி, எஸ். ரெங்கநாதன், ரஞ்சித் பேஜ், சுரேஷ் டி மெல், பிரபாஷ் சுபசிங்க, துமிந்த ஹுலங்கமுவ, சுஜீவ முதலிகே ஆகியோர் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும் நோக்கில் ‘பொருளாதார பேரவை’ வாராந்தம் கூடுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனவும் அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளதாகவும் கடந்த 8ஆம் திகதி வெளியான அமைச்சரவை தீர்மானத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய, ஜனாதிபதி, பிரதமர், வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுக்கமகே, பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன, இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், திறைசேரி செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல, இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் தம்மிக்க நாணயக்கார ஆகியோர் பேரவையின் அங்கத்தவர்களாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்தப் பேரவையில் சிறுபான்மையினர் இடம்பெற்றிருக்காத நிலையில் பேரவைக்கான ஆலோசனைக்குழுவுக்கு சிறுபான்மையினர் நால்வர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெருநிலைப் பொருளாதாரக் கொள்கை, கொவிட் - 19 பெருந்தொற்று நிலைமையின் பின்னர் தேசிய பொருளாதாரத்தின் செயற்பாடு, பொருளாதார மீள்கட்டமைத்தல், அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை, நிதிக் கொள்கைகளில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் உள்ளிட்ட உள்ளூர் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக மிகவும் ஆழமாகக் கலந்துரையாடி ஒட்டுமொத்த பொருளாதார முகாமைத்துவம் மேற்கொள்ளப்படவுள்ளது.

குறித்த பேரவையின் ஆலோசனைகள், வழிகாட்டல்களுக்கமைய ஏற்புடைய அமைச்சுகள், திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவையின் அங்கிகாரத்துடன் இயைபுடைய தீர்மானங்களை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## இலட்சம் ரூபாய் இழப்பீடு

உறவினருக்கு, குடும்ப மீள்வாழ்வுக்காக ஒருமுறை மாத்திரம் செலுத்தப்படும் 100,000 ரூபாயை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

காணாமல் போன ஆட்களின் குடும்பங்களைப் மீள்வாழ்வளிப்பதற்காக ஒருமுறை மாத்திரம் செலுத்தப்படும் கொடுப்பனவை வழங்குவதற்காக நீதி அமைச்சர் அலி சப்ரி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவையால் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கமைய, பல்வேறு நிலைமைகளின் கீழ் ஏற்பட்ட தொந்தரவுகளால் அழுத்தங்களுக்குள்ளாகிய பிரஜைகளுக்கு அவர்களின் வாழ்வை மீளக்கட்டியெழுப்புவதற்காகவும் மற்றும் மீள்நிலைக்குக் கொண்டுவருவதற்கு ஒத்துழைப்பதற்காகவும் இக்கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்கால சந்ததியினர் உள்ளிட்ட இலங்கையர்களின் நலன்களுக்காகவும் பாதுகாப்புக்காகவும் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையில் தற்போது வகுக்கப்பட்டுள்ள கொள்கைகளுக்கமைய அக்குடும்ப ங்களுக்கு உதவிகளை வழங்க வேண்டியுள்ளது.

காணாமல் போன நபர்கள் தொடர்பாக சரியான விசாரணைகளை நடத்தியw பின்னர் இறப்புச் சான்றிதழ் அல்லது காணக்கிடைக்கவில்லை என்ற சான்றிதழை வழங்குவதற்காக பதிவாளர் நாயகத்துக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி- கூட்டமைப்பு சந்திப்பு 10 நாள்களுக்கு பிற்போடப்பட்டது

ஜனாதிபதியுடனான சந்திப்பு இரண்டு முறை ஏற்கெனவே, ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று (15) பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவிருந்த கலந்துரையாடல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சி நடத்தும் ஆர்ப்பாட்டம் காரணமாகவே இந்தக்கூட்டம் ஜனாதிபதி செயலகத்தால் பிற்போடப்பட்டதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் குறிப்பிட்டார்.

25ஆம் திகதி இடம்பெறவுள்ள கூட்டத்தில் தமிழ்த் தேசிய பிரச்சினைக்கான தீர்வு உட்பட தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகள் பல தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாகவும் சுமந்திரன், நேற்று (15) வெளியிட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியுடன் பேசுவதற்கான விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக நேற்று காலை 10 மணிக்கு இரா. சம்பந்தனின் இல்லத்தில் சந்தித்தது உரையாடியதாகவும், இதில் டெலோ இயக்கத்தின் தலைவர், பொதுச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

ஜனாதிபதியுடனான சந்திப்பு இடம்பெற்றிருந்தால் தாம் அதில் கலந்துகொண்டிருக்க மாட்டோம் என்றும் ஆனால் இக்கூட்டம் பிற்போடப்பட்டிருப்பதால் மார்ச் 19ஆம் திகதி தங்கள் கட்சி இந்த முடிவை மீளாய்வு செய்யுமென டெலோ தமக்கு அறிவித்துள்ளதாக சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்டித்து எதிர்க்கட்சியினர் கொழும்பில் நேற்று (15) முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் காரணமாக சந்திப்பு பிற்போடப்பட்டதாக வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜி.எல் பீரிஸ், சுமந்திரன் எம்.பிக்கு அறிவித்துள்ளார்.

## ஐ.எம்.எப் உடன் அடுத்தமாதம் பேச்சு

உத்தியோகப்பூர்வ கலந்துரையாடல் எதிர்வரும் மாதங்களில் ஆரம்பமாகும் என்றார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (15) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் நேற்று முன்தினம் (14) நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவைச் சந்தித்து, நாட்டின் பொருளாதார சிக்கல் குறித்து கலந்துரையாடியிருந்தார். எந்தவோர் அரசாங்கமும் தமது ஆட்சி காலத்தில் பொருட்களின் விலை அதிகரிப்பு, அத்தியாவசிய பொருள் கொள்வனவுக்காக வரிசையில் மக்கள் நிற்கும் போது மகிழ்ச்சியடைய மாட்டார்கள் என தெரிவித்த அவர், 1977ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டில் ஆட்சிக்கு வந்த சகல அரசாங்கங்களும் கடனைப் பெற்று அவற்றை முறையாகச் செலுத்தியுள்ளன.

அதேபோல் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்பட்ட கொரோனா தொற்றால் வெளிநாட்டு கையிருப்பு குறைந்தன.

சுற்றுலா தொழிற்றுறை மற்றும் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புவதில் ஏற்பட்ட மந்த நிலையால் உருவான இந்த நெருக்கடியானது, அடுத்த 12 வருடங்களில் 42 பில்லியன் டொலர் கடனில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

## மின்வெட்டு இல்லை

நாளாந்த மின்வெட்டு காரணமாக, இந்தத் தொழிற்சாலைகளில் பலவற்றின் செயற்பாடுகள் சீர்குலைந்துள்ளதுடன், இதன் விளைவாக, நாட்டுக்கு முதலீட்டாளர் வருகையும் தடைபடுகிறது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வந்து முதலீடு செய்வதை நிறுத்தினால், வருடாந்தம் சுமார் 800,000 அமெரிக்க டொலர் பெறுமதியான ஏற்றுமதி வருமானத்தை இழக்க நேரிடும் என்றும் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

முன்வைக்கப்பட்ட அனைத்து காரணிகளையும் பரிசீலித்த மின்சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, வர்த்தக வலயங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு தற்போதைய மின்வெட்டை நீடிக்க வேண்டாம் என அறிவித்துள்ளார்.

நிலவும் வறட்சியான வானிலை, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக குறிப்பிட்ட வலயங்களில் மின்வெட்டை அமல்படுத்த வேண்டாம் என இலங்கை மின்சார சபைக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

## ஜனாதிபதி இன்றிரவு உரை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டு மக்களுக்கு இன்று (16) இரவு 8.30க்கு உரையாற்றவுள்ளார்.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு புதன்கிழமை உரையாற்றுவார் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், நேரம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. உரையாற்றுவது தொடர்பிலான நேரம், நேற்றைய தினமே அறிவிக்கப்பட்டது.

நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரையாற்றும் நேரத்தில், பல இடங்களில் மின்வெட்டு அமலில் இருக்கும் என்று அறியமுடிகின்றது.

அந்தவகையில், இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அட்டவணையின் பிரகாரம், நாளை (16) இரவு 8.30 மணிமுதல் 21.45 மணிவரையிலும் ஜே.கே.எல் ஆகிய வலயங்களில் மின்வெட்டு அமலில் இருக்கும்.

இதேவேளை, கீ, ஆர், எஸ் ஆகிய வலயங்களில், இரவு 19.15 முதல் 21 மணிவரையிலும் மின்வெட்டு அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா தொற்றில் 8 பேர் மரணம்

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி நேற்றையதினம் (15) மேலும் 08 பேர் உயிரிழந்துள்ளனர் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

04 ஆண்களும் 04 பெண்களும் உயிரிழந்துள்ளனர் என்பதுடன், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 16,415 ஆக அதிகரித்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 06 பேரும் 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடையில் 02 பேரும் மரணித்துள்ளனர்.

## தேயிலை ஏற்றுமதி இடைநிறுத்தம்

ரஷ்யா மற்றும் உக்ரேன் ஆகிய இருநாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள யுத்தம் காரணமாக, குறித்த இரண்டு நாடுகளுக்குமான தேயிலை ஏற்றுமதியை முற்றாக இடைநிறுத்தியுள்ளதாக இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த இரண்டு நாடுகளுக்கும் தேயிலை ஏற்றுமதி செய்யும் போது, பெற்றுக்கொள்ளும் பணம் தொடர்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனங்கள், தேயிலை ஏற்றுமதியை நிராகரிப்பதாகவும் இதனால் முற்றாக தேயிலை ஏற்றுமதியை நிறுத்தியுள்ளதாகவும் இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவர் ஜயந்த கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்துறை கைது செய்யப்பட்டவர்கள் மூவரும் நாரந்தனை பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 550 மில்லிகிராம், 80 மில்லிகிராம் மற்றும் 50 மில்லிகிராம் அளவுகளை உடைய ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட, சந்தேக நபர்களுக்கு எதிராக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஹெரோய்னுடன் மூவர் கைது

ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்துறை

கைது செய்யப்பட்டவர்கள் மூவரும் நாரந்தனை பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 550 மில்லிகிராம், 80 மில்லிகிராம் மற்றும் 50 மில்லிகிராம் அளவுகளை உடைய ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட, சந்தேக நபர்களுக்கு எதிராக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## காலி முகத்திடலில்...

(முதலாம் பக்கத்துக்குரிய மேலதிக படங்கள்)







அழகுத்தீவில் புதைந்திருக்கும் அற்புதங்களை கண்டறியும் ஒரு பயணம்

இந்து சமுத்திரத்தின் முத்தாக திகழும் இலங்கைத் தீவில் புதைந்து கிடக்கும் அற்புதங்கள் ஆயிரம் ஆயிரம்.
இவ் அற்புதங்கள் நம் நாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் இடமாகவோ, பாரம்பரியமாக நமக்கே உரித்தான கலையாகவோ, நாட்டு வைத்தியமாகவோ, நாவூறும் சுவைமிக்க உணவாகவோ, நம் நாட்டில் விளையும் பயிராகவோ கூட இருக்கலாம். ஆதிக்கலையான அங்கப்போர், மர்மமான ஏலியன் மலை, மீன்கள் பாடும் சங்கீதம், தலைமுறை தாண்டி நிலைத்து நிற்கும் பளிங்கு மூக்கு கண்ணாடி நம் நாட்டில் புதைந்திருக்கும் அற்புதங்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

எமது அழகுத்தீவில் இன்னும் அறியப்படாமல் மறைந்து கிடக்கும் பல அற்புதங்கள் ஆயிரம் ஆயிரம் இருப்பது திண்ணம். எனவே அவற்றை தேடிக் கண்டுபிடித்து உலகின் பார்வைக்கு கொண்டு வருவதே இந்தப் பயணத்தின் நோக்கமாகும்.

**இவ்வாறு இலங்கைத் தீவெங்கும் புதைந்து கிடக்கும் அற்புதங்களை உலகறியச் செய்ய நீங்களும் எம்முடன் இணையுங்கள்.**

நம் நாட்டிற்கே உரித்தான விடயங்களை நீங்கள் காணும் பட்சத்தில் அதனை சிறந்த முறையில் புகைப்படமாகவோ அல்லது குறும் வீடியோவாகவோ எடுத்து **www.oitt.lk/ info@oitt.lk** இணையத்தளத்தில் பதிவேற்றுங்கள்.

Cinnamon HOTELS & RESORTS ஏற்பாட்டில்

இணை அனுசரணை
SO SRI LANKA

படைப்பாக்க தொடர்பாடல் அனுசரணை
DentsuGRANT GROUP

Follow us on our pages: /cinnamonhotels /cinnamonhotels /oittsrilanka

The Sunday Times · Daily FT · DailyMirror · Keells · SriLankan Airlines · SCOPE CINEMAS

மக்களைப் பற்றி சிறிதும்

# சிந்திக்காத அரசு

## வளங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்கின்றது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

இலங்கை அரசானது மக்கள் பற்றி சிறிதும் சிந்திக்காது, எமது பிரதேசத்தின் வளங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதால், தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுவதாக பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் பிரான்சிஸ் ஜோசப் தெரிவித்தார்.

மன்னார், பூநகரி ஆகிய பிரதேசங்களில் இரண்டு பாரிய அளவிலான மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திட்டத்துக்கு இந்தியாவின் அதானி குழுமத்துக்கு ஒதுக்கீடு செய்யும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் அரசாங்கம் வெள்ளிக்கிழமை (11) கைச்சாத்திட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியது.



இது தொடர்பில் நேற்று முன்தினம் (14) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இன்று எரிபொருள் இன்மை காரணமாக, மட்டுப்படுத்திய அளவில் தொழிலை எமது தொழிலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

"குறிப்பாக, 40 கடல் மைல்களுக்குச் சென்று தொழில் செய்யவேண்டிய தொழிலாளர்களுக்கு தேவையான எரிபொருள் கிடைப்பதில்லை. குறைந்த அளவு எரிபொருளைக் கொண்டு ஒரு சில மீனவர்கள் மாத்திரமே தற்போது தொழிலுக்குச் சென்று வருகின்றனர். ஏனைய மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதில்லை.

"பூநகரி பிரதேசத்தில் இந்தக் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு தொடர்ந்து நாங்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்ற போதும், இதுவரை மக்கள் பற்றி சிந்திக்காத அரசாங்கம் இப்போது இவ்வாறு இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிட்டதாக அறிகின்றோம்.

"இத்திட்டத்தால் எதிர்காலத்தில் கடற்றொழில் பாதிக்கப்படும். அதேபோல கால்நடை வளர்ப்பும் பாதிக்கப்படும். இந்த அரசு எதைச் செய்தாலும் மக்கள் பற்றி சிந்திப்பதில்லை" என்றார்.

எரிபொருள் தட்டுப்பாடு:

# தள்ளு வண்டிகளில் திண்மக் கழிவகற்றல்

## துர்நாற்றம் வீசக்கூடிய குப்பைகளை மாத்திரம் தள்ளு வண்டிகளில் ஒப்படைக்கவும்

■ அஸ்லம் எஸ். மௌலானா

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, கல்முனை மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் சேவையை தள்ளு வண்டிகளில் முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று (16) தொடக்கம் இது நடைமுறைப்படுத்தப்பட உள்ளதால், சமயலறைக் கழிவுகளில் துர்நாற்றம் வீசக்கூடிய குப்பைகளை மாத்திரம் இத்தள்ளு வண்டிகளில் ஒப்படைத்து, முழுமையாக ஒத்துழைப்பு வழங்குமாறு, பொதுமக்களிடம் கல்முனை மாநகர சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது விடயமாக மேயரின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள




அறிக்கையில், 'கல்முனை மாநகர சபையானது இருபதுக்கு மேற்பட்ட திண்மக் கழிவகற்றல் வாகனங்கள் மூலம் கழிவகற்றல் சேவையை முன்னெடுத்து வருகிறது. எனினும், கடந்த சில நாள்களாக இவ்வாகனங்களுக்குத் தேவையான டீசலைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, மாநகர மேயர் ஏ.எம். றகீபின் அறிவுறுத்தலின் பேரில், அவசர மாற்று ஏற்பாடாக இன்று 16ஆம் திகதி தொடக்கம், கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட 06 வலயங்களிலும் 24 தள்ளு வண்டிகளைக் கொண்டு, சமயலறைக் கழிவுகளை, அதிலும் துர்நாற்றம் ஏற்படக்கூடிய கழிவுகளை மாத்திரம் சேகரித்து, அகற்றுவதற்கு மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இதன்படி உக்கும் கழிவுகளாயினும் உக்காத கழிவுகளாயினும் துர்நாற்றம் ஏற்படாத குப்பைகள் அனைத்தையும் மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் வாகனங்கள் வழமை போன்று சேவையில் ஈடுபடுத்தப்படும் வரை, பொதுமக்கள் தமது வீடுகளிலேயே வைத்து, முகாமை செய்ய வேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

10 சைக்கிள்களுடன்

# சைக்கிள் திருடன் கைது



யாழ். பருத்தித்துறை பகுதியில் பாடசாலை மாணவர்களின் சைக்கிள்களை திருடிவந்த குற்றச்சாட்டில் ஒருவரை கைது செய்துள்ள பொலிஸார், குறித்த நபரிடமிருந்து சுமார் 10 சைக்கிள்களை மீட்டுள்ளனர்.

பருத்தித்துறை, சுப்பர்மடத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே, நேற்று (15) இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளில் 20 சைக்கிள்களைத் திருடி விற்பனை செய்துள்ளதாக சந்தேகநபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அவற்றில் 10 சைக்கிள்களே கைப்பற்றப்பட்டுள்ளன. ஏனையவை தேடப்பட்டு வருவதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

# செயற்குழு கூட்டம்

■ எஸ்.குகன்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம், அகில இலங்கை சைவப்புலவர் சங்க தலைவர் சைவப்புலவர் சி.கா. கமலநாதன் தலைமையில், எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சை விடயங்கள், பட்டமளிப்பு விழா, அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள், தீர்மானங்கள் தொடர்பான முக்கியமான விடயங்கள் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளன.

எனவே, அனைத்து நிர்வாக செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு, அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த. குமரன் அறிவித்துள்ளார்.

புதிய ஆணையாளராக

# பொறியியலாளர் சிவலிங்கம் இன்று பதவியேற்பு

■ சகா



கல்முனை மாநகர சபையின் புதிய ஆணையாளராக, கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பொறியியலாளர் என். சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை தரம் 1 அதிகாரியான இவர், இன்று (16) பதவியேற்கின்றார்.

முன்னாள் ஆணையாளர், ஊழல் குற்றச்சாட்டுகளின் காரணமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இருப்பதால் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக, காரைதீவைச் சேர்ந்த பொறியியலாளர் என். சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்முனை மாநகர சபை வரலாற்றில் ஆணையாளராகப் பதவியேற்கும் முதல் தமிழ் அதிகாரி என். சிவலிங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.



சிறுபோக வேளாண்மை

# நீர் விநியோகம் தொடர்பான கூட்டம்

■ தீஷான் அஹமட்

இவ்வருடம் மேற்கொள்ளப்படவுள்ள சிறுபோக வேளாண்மைச் செய்கைக்கான முன் ஆயத்தக் கூட்டம், திருகோணமலை, சேருநுவர வதிவிட திட்ட முகாமையாளர் காரியாலயத்தில் நேற்று (15) நடைபெற்றது.

மேற்கொள்ளப்படவுள்ள சிறுபோக வேளாண்மைச் செய்கைக்கான நீர்விநியோகத்தை எவ்வாறு, எந்தக் காலப்பகுதியில் வேளாண்மைச் செய்கைக்கு வழங்குவது உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இக்கூட்டத்தில் சேருநுவர, மூதூர், தோப்பூர், கிளிவெட்டி, முன்னம்பொடிவெட்டை உள்ளிட்ட பகுதிகளில் இயங்கும் 42 விவசாய சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டதோடு, விவசாயிகள் தமது கேள்விகளை வருகைதந்த அதிகாரிகளிடம் கேட்டிருந்தனர்.

இக்கூட்டத்தில், அல்லை நீர்வழங்கல் திட்டத்தின் முகாமையாளர் தேசப்பிரிய, கமலநல சேவை நிலைய மாவட்ட உதவி ஆணையாளர், இராணுவ அதிகாரிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மாவிலாறு ஆற்றிலிருந்தே விவசாய நிலங்களுக்கு நீர் விநியோகிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பஸ் சாரதியை

# வெட்டியவருக்கு விளக்கமறியல்

■ செந்தூரன் பிரதீபன்



பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸின் சாரதியை, கோப்பாய் பகுதியில் வைத்து வாளால் வெட்டி காயம் ஏற்படுத்திய சந்தேகநபரை, எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த வாரம் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கோப்பாய் புலனாய்வு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

சந்தேகநபர், சங்கானை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார் எனவும் மேலும் நால்வரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் இருக்கும் ஒருவர் பணம் கொடுத்து கைக்கூலிகளை ஏவி, இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# ரூ.29 மில். செலவில் வகுப்பறை கட்டடம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் 29 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய இரண்டு மாடி வகுப்பறை கட்டடம், நேற்று (15) திறந்து வைக்கப்பட்டது.2019ஆம் ஆண்டின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டது.

இக்கட்டடத்தை, வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன்பந்துல சேன பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்து வைத்தார்.

பாடசாலை அதிபர் பெருமாள் கணேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், கிளிநொச்சி தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் இ.கமலராஜன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.



# பாரிய கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறில் உள்ள காட்டுப் பகுதியில் பாரிய கசிப்பு உற்பத்தி நிலையத்தை பொலிஸார், நேற்று (15) முற்றுகையிட்டனர்.

தருமபுரம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, இந்தக் கசிப்பு உற்பத்தி நிலையம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்போது, 15 பெரல் கோடா, 65 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன், சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், பொலிஸ் விசாரணைகளின் பின்னர், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம் சதுரங்க தெரிவித்தார்.

# தையல் இயந்திரங்கள் வழங்கி வைப்பு

■ நூருல் ஹுதா உமர்




அக்கரைப்பற்று மாநகர சபையின் 2021 பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பிரகாரம், அக்கரைப்பற்று பலாஹ் மற்றும் நகர் வட்டாரங்களில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு, அக்கரைப்பற்று மாநகர மேயர் அதாஉல்லாஹ் அஹமட் ஸகியின் தலைமையில், மாநகர சபையின் ஹல்லாஜ் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (14) நடைபெற்றது.

இதன் போது அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும், அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவருமான கிழக்கின் கேடயம் பிரதான செயற்பாட்டாளர் எஸ்.எம்.சபீஸ், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் ஏ.சீ.எம்.நுஹ்மான், அக்கரைப்பற்று நகர்ப்பள்ளி வட்டாரக் குழுத் தலைவர் எம்.ஐ.எம். ஜுனைதீன் மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

மருத்துவபீட

# தாதியர்களுக்கு விழிப்பூட்டல்

■ ரீ. எல். ஜவ்பர்கான்



கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவபீட தாதிய மாணவர்களுக்கு உணவு, சுகாதாரம் தொடர்பான விழிப்பூட்டல் நடவடிக்கைகள், சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் இ. உதயகுமாரின் வழிகாட்டலில், கோட்டைமுனை பொதுச் சுகாதார பரிசோதகர் ரி. மிதுன்ராஜ் தலைமையில், மட்டக்களப்பு பொதுச் சந்தையில் வைத்து இந்த விழிப்பூட்டல் செயற்பாடு, நேற்று (15) முன்னெடுக்கப்பட்டது.

தரமான உணவுப் பொருட்களை விற்பனை நிலையங்களில் கண்டறிதல், மனித பாவனைக்குதவாத பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக்கர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல் உட்பட பல்வேறு உணவுப் பாதுகாப்பு தொடர்பாக விளக்கங்கள் இதன்போது வழங்கப்பட்டன.

# பெண் உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு

■ ஏ.எல்.எம்.ஷினாஸ்

மருதமுனை பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக கடமையாற்றி வரும் கிராம சேவை பெண் உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், ஓய்வுநிலை உத்தியோகத்தர்கள் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு, பெரியநீலாவணை புலவர்மணி சரிபுத்தீன் மஹா வித்தியாலயத்தில், பாடசாலையின் அதிபர் எம்.எம். முஹம்மது நியாஸ் தலைமையில் நேற்று முன்தினம் (14) நடைபெற்றது.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், கொரோனா தொற்று தீவிரமாக பரவிய காலகட்டத்தில் கிராம மட்டத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய பெண் உத்தியோகத்தர்களே கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக மருதமுனை பிரதேசத்தின் முதல் பெண் கலாநிதியும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உதவி நூலகருமான முஹம்மட் மஜீத் மஸ்றூபா கலந்துகொண்டார்.

கௌரவிக்கப்பட்ட பெண் உத்தியோகத்தர்களுக்கு பாடசாலையின் ஆசிரியைகளால் சிறப்பு அன்பளிப்புப் பொருள் வழங்கி வைக்கப்பட்டதுடன், பாடசாலையின் வாசிகசாலைக்கு ஒரு தொகுதி நூல்களும் கையளிக்கப்பட்டன.



## கிரிமிட்டிய மக்கள்

# மலம் கலந்த நீரை பருகும் அவலம்

■ டி.சந்ரு

தலவாக்கலை பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான டெஸ்போட் லோன் டிவிசன் (கிரிமிட்டிய) கடை வீதியை அண்மித்த சுமார் 30 குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு, மலம் கலந்த தூய்மையற்ற நீரைப் பருகும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இம்மக்கள், தமது அன்றாட பாவனைக்காக பயன்படுத்தும் நீர், எவ்வித பாதுகாப்பும் அற்ற, அசுத்தமான இடத்திலிருந்து





விநியோகிக்கப்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த நீரை அருந்துவதால் சிறுநீரக நோய், வாந்தி பேதி உள்ளிட்ட நோய்கள் ஏற்படுவதாகவும், குறிப்பாக சிறுவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக தோட்ட சுகாதார வெளிக்கள உத்தியோகஸ்தரிடமும் தோட்ட முகாமையாளரிடமும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த நீரை பயன்படுத்துபவர்கள், தோட்டத்தில் தொழில் செய்யாதபடியால், இதைச் சுத்தம் செய்ய முடியாது என அசமந்தமான பதிலைத் தெரிவிப்பதாக இப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, தங்கள் பகுதிக்கான குடிநீர் கிணற்றை சுத்தம் செய்து, உரிய முறையில் நீரைப் பெற்றுத்தருமாறு உரிய அதிகாரிகளுக்கு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 1,500 அடி பள்ளத்தில் ஜீப் பாய்ந்தது

### இருவர் சம்பவ இடத்திலேயே பலி

■ எஸ். யோகா



தெல்தோட்டை, பட்டியகம மேல்பிரிவு பிரதேசத்தில், ஜீப் வண்டி நேற்று முன்தினம் இரவு (14), சுமார் 1,500 அடி பள்ளத்தில் பாய்ந்ததால், ஜீப்பின் சாரதியும் அதில் பயணித்த மற்றுமொருவரும் உயிரிழந்துள்ளனர்.

பட்டியகம மேல்பிரிவு பிரதேசத்தில் மலையுச்சியில் உள்ள தனியார் தொலைத்தொடர்பு கோபுரத்தின் புனரமைப்பு பணிகளுக்காக சென்ற இருவரே இவ்வாறு விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

மரணமடைந்த இருவரும் கம்பளை, கண்டி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் 64, 35 வயதானவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலேயே குறித்த இருவரும் உயிரிழந்த நிலையில், விபத்துக்குள்ளான வாகனத்தில் இவர்கள் இருவரின் உடலங்களும் இறுகி இருந்துள்ளன.

இதனையடுத்து கலஹா பொலிஸாரும் பிரதேசவாசிகளும் இணைந்து, கடும் சிரமத்தின் மத்தியில் சடலங்களை மேலே கொண்டு வந்துள்ளனர்.

சடலங்கள், பேராதனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லபட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கலஹா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கர்ப்பிணிகளுக்கு உலருணவு பொதிகள்



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, கொட்டகலை பிரதேச சபையின் ஏற்பாட்டில் சபை தலைவர் ராஜமணி பிரசாத் தலைமையில், மகளிர் தின விழா, நேற்று (15), ரிஷிகேஷ் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. குறித்த நிகழ்வின் போது, கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. கர்ப்பிணி தாய்மார்கள் 500 பேருக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், கொரோனா காலங்களிலும் நோயாளர்களுக்கு சேவையாற்றிய வைத்தியர்கள், தாதிமார்களுக்கும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(எஸ். கணேசன்)

## கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட

# மாணவனின் உடலில் 'மாவா' கலந்துள்ளது

■ எஸ் சதீஸ்

பொகவந்தலாவ, செல்வகந்தை தோட்டத்திலுள்ள கிணறு ஒன்றிலிருந்து, இந்த மாதம் 12ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட உயர்தர மாணவனின் உடலில் போதைப் பொருள் கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த மாணவனின் உடலில் மாவா எனும் புகையிலை தூள் அதிகளவில் கலந்திருக்கிறது டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி இனோக்கா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பொகவந்தலாவை பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கடந்தவாரம் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியைப் பார்வையிடுவதற்காக, 12ஆம் திகதி காலை மைதானத்துக்குச் சென்ற குறித்த மாணவன், மறுநாள் 13ஆம் திகதி அதிகாலை மூன்று மணியளவில் வீட்டுக்குத் திரும்பியுள்ளார்.

பின்னர் காலை 8 மணிக்கு நித்திரையில் இருந்து எழும்பிய அவர், தோட்டத்திலுள்ள கிணற்றுக்கு அருகில் சென்று அமர்ந்திருந்தவாறு மயக்கமடைந்த நிலையில் குறித்த கிணற்றில் விழுந்து உயிரிழந்திருக்கலாமென பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

சடலம் மீதான பிரேத பரிசோதனையின் போது, குறித்த மாணவன், 12ஆம் திகதி அதிகாலையில் இருந்து எவ்வித உணவையும் உட்கொண்டிருக்கவில்லை என்பதும் உறுதியாகியுள்ளது என சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## உதவி கோருகிறார்



இரத்தினபுரி, பல்லேபெத்தையைச் சேர்ந்த அசோக திலகரத்ன, சிறுவயதில் விபத்தொன்றில் சிக்கி, முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளார். அவர், கடந்த 15 வருடங்களாக சிகிச்சை பெற்று வருகின்றார். கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் இவருக்கு மாதமொன்றுக்கு 14 ஆயிரத்து 870 ரூபாய் செலவாகிறது.

குடும்பத்தினரும் சுகவீனம் அடைந்துள்ளனர். ஆகையால், பரோபகாரிகளிடமிருந்து மீண்டும் உதவியை எதிர்பார்க்கின்றார்.

உதவிசெய்ய விரும்புவோர், கொடக்கவெல மக்கள் வங்கிக் கிளையில், 245-2001-2005-6034 என்ற கணக்கிலகத்துக்கு வைப்பிலிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலதிக விவரங்களுக்கு 077-5574253 அல்லது 071-9966935 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.



## சந்திப்பு

■ சிவாணி ஸ்ரீ

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவுக்கும் இடையிலான கலந்துரையாடல், இரத்தினபுரியில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதியில் நடைபெற்றது.

இதன்போது, சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, பலாங்கொடை, எம்பிலிபிட்டிய, கேகாலை ஆகிய நகர சபைகள் மற்றும் 25 பிரதேச சபைகள் உட்பட மொத்தமாக 29 உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி திட்டங்கள், பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் மேற்படி மாகாணத்தின் உள்ளூராட்சி சபைகளின் கீழ் இயங்கும் நூலகங்களுக்கு நூல்களும் வழங்கி வைக்கப்பட்டன.




## காலை ஒன்றுகூடல் அல்ல; கால்கடுக்க காத்திருக்கின்றனர்

■ பாலித ஆரியவன்ஸ



சீருடையுடன் மாணவர்கள் வரிசையாக நிற்பதை பார்க்குமிடத்து, காலை ஒன்றுகூடலுக்கு நிற்பதைப் போலிருக்கும் அல்லது, பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்துக்கு வராமல் சுணங்கி வந்தவர்களாக இருப்பர் என பலரும் நினைக்கக்கூடும். எனினும், பஸ்ஸூக்காக மாணவர்கள் இவ்வாறு கால்கடுக்க காத்திருக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு சேவையில் ஈடுபடும், தனியார் பஸ்கள் உரியமுறையில் சேவையில் ஈடுபடாமையால் குறித்த கிராமங்களிலிருந்து நகரங்களிலுள்ள பாடசாலைக்கு வரும் மாணவர்கள் உரிய நேரத்துக்கு பாடசாலைகளுக்கு செல்வதில் கடும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இவ்வாறு காலதாமதமாகி பாடசாலைக்குச் செல்ல நேரிடும் மாணவர்கள், பாடசாலைகளின் காலை நிகழ்வுகள் நிறைவடையும் வரை பாடசாலை வாயில்களில் பல மணிநேரம் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

ஊவா மாணாத்திலுள்ள பல பாடசாலைகளில் இந்த நிலைமை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், தமது பஸ்களுக்கான எரிபொருளை பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால் கிராமங்களிலுள்ள மாணவர்களையும் ஆசிரியர்களையும் உரிய நேரத்தில் பாடசாலைக்கு கொண்டு சேர்ப்பதில் தாமதம் ஏற்படுவதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கோதுமை மா விலை அதிகரிப்பால்

# தின்பண்டங்களுக்குத் திண்டாட்டம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன



கோதுமை மாவின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதால், பண்டிகைக் காலத்தில் கோதுமை மாவை அடிப்படையாக வைத்து, இனிப்பு வகைகளை தயாரிப்பவர்கள் பாரிய சிக்கல்களுக்கு முகம்கொடுத்துள்ளார்கள் என மாத்தளை மாவட்ட இனிப்பு பண்டங்கள் தயாரிப்போர் தெரிவித்துள்ளனர்.

கொவிட்-19 பெருந் தொற்றுக்கு பின்னர், 2020, 2021 புத்தாண்டு காலங்களில் தமது வருமானங்களை இழந்துள்ள நிலையிலேயே, மீண்டும் இவ்வாறானதொரு சிக்கலுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கோதுமை மாவுடன் இனிப்பு பண்டங்கள், பேக்கரி உற்பத்தி பொருட்களுக்கான மூலப்பொருட்களுக்கும் பாரிய தட்டுபாடு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பாக தேங்காய் எண்ணெய், பாசிப்பயறு, கௌபி உள்ளிட்ட பொருட்களும் விலை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

> “ பண்டிகைக் காலத்தில் இனிப்பு வகைகளை தயாரிப்பவர்கள் சிக்கல்களுக்கு முகம்கொடுத்துள்ளார்கள்

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



பதுளை, ஸ்பிரிங்வெலி கோட்டகொட தமிழ் வித்தியாலயத்தில் புலமைப் பரீட்சைக்குத் தோற்றிய எம். சிவஷ்திகா - 157 புள்ளிகளையும் ஆர். தர்ஷினி - 157 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர்.



அண்மையில் வெளியான 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில், கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த, மாணவன் நவநீதன் நவீன் 157 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும் சமூகத்துக்கும் பெருமை தேடித் தந்துள்ளார்.



கொட்டக்கலை தமிழ் தேசிய பாடசாலை மாணவி லலித்குமார் நிக்ஷனா 161 புள்ளிகளைப் பெற்று சித்தி அடைந்துள்ளார். இவரை அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரும் வாழ்த்துகின்றனர்.



பசறை, மடுல்சீமை, வெரலபத்தன தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த ஆர். ஷாலினி - 163, எஸ். சஸ்வர்தனா - 163, எஸ். தேஷானி - 147 ஆகிய மாணவர்களுடன், வகுப்பாசிரியர்கள் ஆர். ரவிச்சந்திரன், ஏ. ரமேஷ் ஆகியோரை காணலாம்.

## கூட்டம்

பதுளை, சரஸ்வதி தேசிய கல்லூரியின் 2022 ஆம் ஆண்டுக்கான பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் கல்லூரியின் அதிபரும், பழைய மாணவர் சங்கத்தின் தலைவருமான திருலோகசங்கர் தலைமையில் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது ஏற்கெனவே புதிய பதவிகளுக்காகக் கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் இவ்வாண்டுக்கான பழைய மாணவர் சங்க செயலாளர், பொருளாளர் உட்பட புதிய நிர்வாகக் குழு அங்கத்தினர் தெரிவு இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் தற்கால செயற்பாடுகளை வலுப்படுத்தல், கல்வி மேம்பாட்டு செயற்றிட்டங்களை பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக முன்னெடுத்தல், எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட உள்ளது என சங்கத்தின் தற்போதைய செயலாளர் எஸ்.மகேந்திரகுமார் தெரிவித்தார்.

# பொறுமையை இழந்து நிற்கும் மக்களும் கண்டுகொள்ளாத அரசாங்கமும்

மக்கள் பிரதிநிதிகளை விடவும், அவர்களுக்கு ஆலோசனை கூறுகின்றவர்களுக்கு செவிசாய்க்க வேண்டும்; மக்களின் குரல்களுக்கு காதுகொடுக்கவேண்டும். அப்போதுதான், நாட்டில் நல்லாட்சி ஏற்படும். அதுமட்டுமன்றி, உலக மாற்றத்துக்கு ஏற்ப, தீர்க்கதரிசனத்துடன் செயற்படவேண்டும். இல்லையேல், ஆட்சிப்பீடம் ஏற்றியவர்களே, ஆட்சிக்கு எதிராகக் குரல்கொடுக்க ஆரம்பித்துவிடுவர்.

பொதுவாக, அரசாங்கத்துக்கு எதிரான கேலிகளும் கிண்டல்களும் அதிகரித்துள்ளன. அதேபோல, ஊடகங்களில் கருத்துத் தெரிவிக்கும் மக்கள், "ஆணி அடிக்க வேண்டும்" எனத் தூற்றுகின்றனர். இன்னும் சிலர், "ஆட்சிப்பீடம் ஏறியதற்காய் பாற்சோறு உண்டோம்; இப்போது, அடுப்பில் பானையை வைக்கமுடியவில்லை என்பதற்காக, பாற்சோறு உண்கின்றோம்" என்றெல்லாம் தூற்றத்தொடங்கிவிட்டனர்.

கிராமங்களில் கூலித்தொழில் செய்யும் ஒருவருக்கு, நாள் கூலி கிடைக்காவிடின், அயல் வீடுகளில் இருப்பவர்களிடம் கடனை வாங்கி, அன்றைய நாளைக் கடத்துவதைப் போலவே அரசாங்கத்தின், பொருளாதார நிர்வாகமும் அமைந்திருக்கின்றது.

'உள்ளிருப்பவர்கள் கூறுவதைக் கேட்பதும் இல்லை; வெளியில் இருப்போர் சொல்வதற்கு செவிசாய்ப்பதும் இல்லை' என்பதை, இறுக்கமாகக் கடைப்பிடித்தால், எதிரான கோஷங்கள் வலுப்பெறும்.

எரிபொருளுக்குத் தட்டுப்பாட்டால், பெரிய நிறுவனங்களைக் கொண்டுநடத்துவோர், தேவையான அளவுக்கு எரிபொருட்களை, பெரல்களில் கொள்வனவு செய்கின்றனர்.

குறைந்தளவுக்கு எரிபொருள் தேவைப்படும் தரப்பினர், கேன்களில் பெற்றுச்செல்கின்றனர். இந்நிலையில், வாகனத்தின் முழு தாங்கிக்கும் எரிபொருளை நிரப்புவதால், எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதாக, ஆளும் தரப்பினர் பதிலளிக்கின்றனர். இவ்வாறான பதில்களை கேட்டுக்கொண்டிருப்பதற்கு மக்கள் இனிமேலும் தயாரில்லை என்பதை விளங்கிக்கொள்ளவேண்டும்.

இந்நிலையில்தான், கேன், பெரல்களில் எரிபொருளை நிரப்பும், ஊழியர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. அவ்வாறு நிரப்புவது சட்டத்துக்கு முரணானது எனவும் அறிவித்துள்ளது.

சட்டத்துக்கு முரணான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றால், அதனை ஆரம்பத்திலேயே தடுத்திருக்கவேண்டும். இல்லையேல், முரண்பாடுகள் அதிகரித்துக்கொண்டே செல்லும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இந்த அரசாங்கத்தின் தீர்மானங்களில் பல, அன்றைய பொழுதைக் கழிப்பதாக அமைந்துவிடுகின்றது.

மக்கள் பொறுமையை இழந்து நிற்கின்றனர் என்பது, காலி முகத்திடலில் ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் ஊடாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

அதேபோல், அந்தப்போராட்டத்தில் பங்கேற்றிருந்தவர்களில் சிலர், வீதியோரங்களில் விழுந்துகிடந்தனர். அந்தப் படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டன. அதேபோன்று, கடந்த அரசாங்கத்துக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் போதும், மதுபோதையில் விழுந்து கிடப்பதாக சுட்டிக்காட்டி படங்கள் சில பகிரப்பட்டன.

ஒவ்வொரு படங்களும் ஒவ்வொரு கதைகளைக் கூறும். மக்கள் அணிதிரண்டு நிற்கின்றனர் என்பதை அரசாங்கம் புரிந்துகொண்டு அடுத்தடுத்த கட்டங்களை நகர்த்திச் செல்லவேண்டும். கண்டுக்கொள்ளாது விடுவது, பிரச்சினைக்கு தீர்வாகாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

இளமையைத் தொலைக்கும் போலி இன்பங்களை, இளைய தலைமுறையினர் நிறுத்தியேயாக வேண்டும். சந்தோஷங்கள் எல்லாமே நல்லவைகள் இல்லை.

வாலிப தேகம் எல்லா இச்சைகளையும் கேட்கலாம். அது ஒழுக்கமற்ற ஆசை என்றால், கத்தரிக்க வேண்டியதில் ஏது சுணக்கம்?

அனுபவிக்க வேண்டிய வயதில் அனுபவிக்க வேண்டும் எனும் உபதேசத்தை, கெட்ட நண்பர்கள் போதிப்பதுண்டு.

அனுபவிக்க வேண்டிய நல்ல விடயங்கள் ஏராளம் உள்ளன. கல்வி கற்றல், கலை ஞானங்களைத் தேடுதல், பக்தி ஊடாக மனத்தில் அமைதியை உண்டு பண்ணுதல், நல்ல உரைகளை பெரியோர் மூலமும் ஆசிரியர் மூலமும் கேட்டறித்தல், இசையோடு இணைதல் எனப்பல உள்ளன.

நல்ல விடயங்கள் எல்லாமே அனுபவிக்க வேண்டியவைதான். மதுஅருந்துவதாலும் போதைவஸ்து பாவிப்பதாலும் எந்தச் சந்தோஷத்தையும் அடையமுடியாது.

தெய்வீக நெறியில் ஆர்வம் கொள்க! இளவயதில், ஒழுக்கமே வாழ்வின் குறிக்கோள் எனக்கொண்டால், முதுமைவரை சந்தோஷம் நிலைபெறும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## தேசிய அரசாங்கம் என்ற பெயரில்

# மற்றொரு திருகுதாளம்



எம்.எஸ்.எம். ஐயூப்

நாடு எங்கே செல்கிறது என்பது, ஒருவருக்கும் தெரியாது. மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சினைகள், எத்தனை ஆண்டுகளில் தீரும் என்றும் கூற முடியாத நிலை உருவாகியிருக்கிறது. பிரச்சினைகள் தீராதது மட்டுமல்ல; அவை நாளாந்தம் வரலாற்றில் ஒருபோதும் காணாத வேகத்தில் அதிகரித்தும் செல்கின்றன.

சிறிதளவு உணவு வகைகளைத் தவிர, நாட்டுக்குத் தேவையான அனைத்தும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தே, இவ்வளவு காலமும் பெற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால், அவற்றுக்குத் தேவையான வெளிநாட்டுப் பணத்தில், ஒரு பகுதியை மட்டுமே, நாடு வருடாந்தம் சம்பாதித்து வருகிறது. எனவே, வருடா வருடம் நாட்டின் வெளிநாட்டுக் கடன் தொகை அதிகரித்து வந்துள்ளது.

இந்த நிலையில்தான், கொவிட்-19 பெருந்தொற்று நோய் நாட்டைத் தாக்கி, வெளிநாட்டு செலாவணியை நாட்டுக்குச் சம்பாதித்துத் தரும் துறைகளைப் பாதித்தது. இப்போது, எண்ணெய் மற்றும் எரிவாயு உள்ளிட்ட எரிபொருட்கள், உணவு ஆகியவற்றை இறக்குமதி செய்யவும் முன்னர் பெற்ற கடனை மீளச் செலுத்தவும், வெளிநாட்டுப் பணம் இல்லாமல் அரசாங்கம் தவிக்கிறது. நாட்டின் நிலையை அறிந்த வெளிநாடுகள், கடன் கொடுக்கவும் தயங்குகின்றன.

அதேவேளை, வேறு சிலர் தேசிய அரசாங்கத்தை நிறுவி, இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற கருத்தையும் பரப்பி வருகிறார்கள். சிங்கள ஊடகங்களில், இதற்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவமும் வழங்கப்பட்டு வருகிறது.

அரசாங்கத்துக்கு எதிராக, நாட்டில் பெரும் எதிர்ப்பு உருவாகி வரும் நிலையில், அந்த எதிர்ப்பைத் தணிப்பதற்காக, ஆளும் கட்சியிலிருந்தே இந்த ஆலோசனை முளைத்திருக்கவும் கூடும்.

ஏற்கெனவே இந்தக் கருத்தை, ஏறத்தாழ சகல எதிர்க்கட்சிகளும் நிராகரித்துள்ள போதிலும், அரசாங்கம் நினைத்தால் எதிர்க்கட்சிகளில் ஒன்றை சேர்த்துக் கொண்டு, தேசிய அரசாங்கத்தை நிறுவலாம்.

தேசிய அரசாங்கம் என்ற எண்ணக்கருவுக்கு, 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை, இலங்கை அரசியலில் சட்ட ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட ஒரு வரைவிலக்கணம் இருக்கவில்லை. 2019ஆம் ஆண்டு, அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட போதே, அந்த வரைவிலக்கணம் உருவாக்கப்பட்டது.

அதன்படி, பதவிக்கு வரும் அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு, நாடாளுமன்றத்தில் உள்ள ஏனைய கட்சிகளுடன் இணைந்து அமைக்கும் அரசாங்கமே தேசிய அரசாங்கமாகும்.

இது மிகவும் சர்ச்சைக்குரிய விளக்கமாகும். பதவிக்கு வரும் கட்சி, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக் கொண்ட கட்சியுடன் இணைந்து, ஓர் அரசாங்கத்தை அமைத்தால், அதுவும் தேசிய அரசாங்கமாகுமா? இந்தச் சட்டத்தின் பிரகாரம், "ஆம்" என்று தான் கூற வேண்டும்.

அரசியலமைப்பில் உள்ள இந்த வாசகத்தின் உண்மையான நோக்கத்தை அறிய, அத்தோடு வரும் அமைச்சர்களின் எண்ணிக்கையைப் பற்றிய வாசகத்தையும் வாசிக்க வேண்டும். தேசிய அரசாங்கம் இல்லாத பட்சத்தில், 30 அமைச்சர்களை மட்டுமே ஜனாதிபதியால் நியமிக்க முடியும். ஆனால், அது தேசிய அரசாங்கமாக இருந்தால் எண்ணிக்கையைப் பற்றிய வரையறையின்றி அமைச்சர்களை நியமிக்கலாம்.

அதேவேளை, அரசியலமைப்பில் இந்த விடயம், அமைச்சர்களின் எண்ணிக்கையைப் பற்றிய வாசகத்தின் கீழேயே வருகிறது என்பதால், தேசிய அரசாங்கத்தின் நோக்கமே, அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதாகும். ஏனெனில், தேசிய அரசாங்கத்தை எந்த நிலையில் அமைக்கலாம் என்பது அரசியலமைப்பில் இல்லை.

குறிப்பிட்டதொரு விஞ்ஞானபூர்வ அடிப்படையில், அமைச்சர்களை நியமித்தால், சாதாரண அரசாங்கமாக இருந்தாலும் தேசிய அரசாங்கமாக இருந்தாலும், அமைச்சர்களின் எண்ணிக்கையை அரசாங்கம் அதிகரிக்கத் தேவையில்லை. ஆனால், தமது உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்காவிட்டால், அரசாங்கத்தில் சேர கட்சிகள் முன்வர மாட்டா. அதாவது, இது ஒரு வகையிலான இலஞ்சமாகும். இது அரசியலமைப்பிலேயே அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டு நலனைக் கருத்தில் கொண்டு, இரண்டு, மூன்று கட்சிகள் ஒன்றிணைந்து, தேசிய அரசாங்கம் அமைப்பதாக இருந்தால், அரசாங்கத்தில் சேரும் கட்சிகள், அமைச்சர் பதவிகளை எதிர்பார்க்கவும் கூடாது. பிரதான கட்சி, இருக்கும் 30 அமைச்சர் பதவிகளை சிறு கட்சிகளுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராகவும் இருக்க வேண்டும். அவ்வாறான அரசியல் நாகரிகம் நாட்டில் இல்லை.

அதேவேளை, அக்கட்சிகள் குறிப்பிட்ட பிரச்சினையை தீர்ப்பதற்காகவே ஒன்று சேர வேண்டும். அதாவது, அக்கட்சிகள் ஏனைய விடயங்களை முடிவு செய்யும் முன்னர், அதற்கான ஒரு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். அத்திட்டம் தயாரிக்கும் விடயத்தில் அவை தோல்வி கண்டால், ஒன்றிணைவதில் அர்த்தம் இல்லை. முதலில் ஒன்றிணைந்து, அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொண்டு, பின்னர் சம்பந்தப்பட்ட பிரச்சினையை தீர்க்க முற்படுவதென்பது நாட்டை ஏமாற்றும் செயலாகும்.

இது போன்றதொரு நிலைமை 2001ஆம் ஆண்டு ஏற்பட்டது. ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலிருந்து, சில அமைச்சர்கள் விலகிச் சென்றதை அடுத்து, அரசாங்கம் கவிழும் நிலை ஏற்பட்டது.

அப்போது மக்கள் விடுதலை முன்னணி, அரசாங்கத்தை பாதுகாக்க முன்வந்தது. ஆனால், அம்முன்னணி அதற்காக ஒரு நிபந்தனையை விதித்தது. அதாவது, ஏற்கெனவே நாட்டில் சகல கட்சிகளும் இணக்கம் காணப்பட்டதன் பிரகாரம், நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் வகையில் சுயாதீன ஆணைக்குழுக்களை நிமிக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனையாகும்.

அதன்படி கூட்டரசாங்கத்தை உருவாக்கும் முன்னர், பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் ஆணைக்குழுக்களின் அதிகாரங்கள் போன்றவற்றைப் பற்றி முன்கூட்டியே பேச்சுவார்த்தை நடத்தி, பின்னர் கூட்டரசாங்கத்தை நிறுவின. பொதுவான இணக்கப்பாடு இருந்த போதிலும், அதற்கு முன்னர் சந்திரிகா இந்த விடயத்தை இழுத்தடித்துக் கொண்டே இருந்தார்.

ஆனால், மக்கள் விடுதலை முன்னணியும் அரசாங்கத்திலிருந்து விலகினால் அரசாங்கம் நிச்சயமாக கவிழும் என்பதால் ஆணைக்குழுக்களை நியமிக்கும் வகையில் அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தார்.

அது ஒரு தேசிய அரசாங்கம் அல்ல; என்றாலும் எதற்காக ஒன்றிணைகிறோம் என்பதை முன்கூட்டியே தீர்மானித்துக் கொண்டு, பின்னர் இணைவதற்கான சிறந்த உதாரணமாகும். அவ்வாறு இல்லாவிட்டால், இணையும் கட்சிகளின் தலைவர்கள் பிரச்சினையை தீர்க்காது, அமைச்சர் பதவிகளைப் பகிர்ந்து கொண்டு, மக்கள் பணத்தில் சொகுசு வாழ்க்கை நடத்த சந்தர்ப்பம் கிடைக்கும். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அதுவே நடந்தது.

தற்போதைய நிலையில், தேசிய அரசாங்கம் அமைத்தாலும் பிரச்சினைகளை தீர்க்க அத்தியாவசியமான நேர்மை என்ற பண்பு, அரச தலைவர்களிடம் இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. தற்போதைய நெருக்கடியை சமாளிக்க, ஜனாதிபதி நியமித்த பொருளாதார சபையை பார்த்தால் அந்த நேர்மையின் அளவு தெரிகிறது.

அச்சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள மஹிந்தானந்தவுக்கும் ஜொன்ஸ்டனுக்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடியை விளங்கிக் கொள்ளவும் விளக்கவும் போதிய பொருளியல் அறிவு இருகிறதா? அவர்கள் ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் சகல நடவடிக்கைகளையும் நியாயப்படுத்திக் கொண்டு, ஜனாதிபதியிடம் நல்ல பெயரை பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

விவசாய அமைச்சர் மஹிந்தானந்த, முன்னேற்பாடு எதுவும் இல்லாமல் ஜனாதிபதி விதித்த இரசாயன உர இறக்குமதித் தடையை இன்னமும் நியாயப்படுத்திக் கொண்டு இருக்கிறார். இது அரசாங்கத்தின் நேர்மையை கேள்விக்குறியாக்குகிறது.

அதேபோல், நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியும் உயிர்கொல்லி நோயொன்றை எதிர்கொண்டும் இருக்கும் நிலையில் அரசாங்கம் சீனியின் இறக்குமதி வரியை ஏறத்தாழ முற்றாகவே இரத்துச் செய்தது. வர்த்தகர்கள் அதற்கு ஏற்றவாறு சீனி விலையை குறைக்காதிருந்த போது, அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காத அரசாங்கத்தின் நேர்மை எவ்வாறானது என்பதை புரிந்து கொள்ள முடியும். இந்த நடவடிக்கையின் மூலம் வர்த்தகர்கள், கோடிக் கணக்கில் (9,000 கோடி ருபாய் என எதிர்க்கட்சிகள் கூறின) மேலதிகமாக சம்பாதித்துக் கொண்டனர்.

தேசிய அரசாங்கம் அமைப்பதாக இருந்தால், அரச தலைவர்கள் மற்றவர்களின் கருத்தை மதிக்கும் பக்குவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனால், டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதியைத் தீர்மானிக்க, சந்தைக்கு இடமளிக்க வேண்டும் என்று பொருளியல் நிபுணர்கள் கூறியதை அரசாங்கம் ஏற்கவில்லை.

அதன் காரணமாக, நாட்டுக்குள் டொலர் வருவது வெகுவாக நின்றுவிட்டதன் பின்னரே, அரசாங்கம் அந்த ஆலோசனையை ஏற்றது. இவ்வாறான நிலையில் தேசிய அரசாங்கம் என்பது வெறும் ஏமாற்று வித்தையும் மற்றோர் திருகுதாளமும் ஆகும்.

## கடிதங்கள்

### பொலிவேரியன் கிராமத்தில்

## பலமாதங்களாக அகற்றப்படாத கழிவுகள்

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட சாய்ந்தமருது குடியேற்ற கிராமமான பொலிவேரியன் பிரதேசத்துக்கு மேற்குப் புறமாகவுள்ள பிரதேசத்திலும் பாலத்துக்கு அருகாமையிலும் காணப்படும் குப்பைகள், பல மாதங்களாக அகற்றப்படாமல் குவிந்து காணப்படுகின்றன.

மக்கள் நடமாட்டமுள்ள இப்பிரதேசத்தில் பொது மைதானம், விவசாய விரிவாக்கல் அலுவலகம், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயம், கால்நடை வைத்திய அதிகாரி காரியாலயம், ஹிஜ்ரா பள்ளிவாசல் போன்றவை அமையப் பெற்றுள்ளன.

மக்களால் கொட்டப்படும் குப்பைகள், கல்முனை மாநகர சபையால் அகற்றப்படாமையாலேயே மாதக்கணக்கில் இக்குப்பைகள் குவிந்து கிடப்பதற்கு காரணமாகும். இந்தப் பகுதியில் மிருகங்களின் கழிவுகள், வீட்டு கழிவுகள் என்பன வீசப்படுவதால் கட்டாக்காலி மாடு, ஆடு, நாய், பூனை என்பனவற்றாலும் காகம், கோழி போன்ற பறவைகளாலும் பல இடங்களுக்கும் பரப்பப்பட்டுள்ளதால் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் இப்பிரதேச மக்கள் சுகாதார சீர்கேடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தத் தவறினால், பொலிவேரியன் கிராமத்தில் பிரமாண்டமான குப்பை மேடு உருவாவதை எவராலும் தடுக்க முடியாது.

அஸ்ஹர் இப்றாஹிம்



# அமைச்சரவைத் தீர்மானங்கள் சில...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்று முன்தினம் (14) கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள் சில...




### 01. புரிந்துணர்வு ஒப்பந்தம்

ரஷ்யா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கு இடையில் நற்தொடர்புகளை தொடர்ந்தும் வலுப்படுத்தல், விமான மற்றும் விண்வெளிப் பொறியியல் துறைகளில் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புகளை அதிகரித்தல், கூட்டாக ஆர்வம் காட்டும் துறைகள் தொடர்பாக ஆய்வுகளை நடத்துவதற்காக கல்வியியலாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளைப் பரிமாற்றிக் கொள்ளல் போன்ற நோக்கங்களுடன், ஜெனரல் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரி மற்றும் ரஷ்ய குடியரசின் UFA அரச விமான சேவைகள் தொழில்நுட்ப கல்லூரிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு அங்கிகாரம்

### 02. வீடொன்று வழங்குதல்

ஜப்பான், டோக்கியோ நகரில் 2020 ஆம் இடம்பெற்ற பரா ஒலிம்பிக் போட்டித்தொடரில் ஹேரத் முதியன்சலாகே பிரியந்த தினேஷ் ஹேரத், ஈட்டி எறிதல் போட்டியில் உலக சாதனை படைத்து தங்கப்பதக்கத்தை வென்றெடுத்து இலங்கைக்குப் புகழ் ஈட்டிக் கொடுத்துள்ளார்.

கொழும்பு- கொம்பனித்தெரு மெட்ரோஹோம் வீடமைப்புக் கருத்திட்டத்தில் 14.2 மில்லியன் ரூபாய் பெறுமதியான வீட்டு அலகொன்றை வழங்க அமைச்சரவை அங்கிகாரம்.

### 03. காணியொன்றை வழங்கல்

நாரஹேன்பிட்டிப் பகுதியில் 07 ஏக்கர் 39.9 பேர்ச்சர்ஸ் கொண்ட காணி, நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இலங்கை விமானப் படை மருத்துவமனையை அமைப்பதற்காக 03 ஏக்கர் காணித்துண்டை வழங்க அமைச்சரவை அங்கிகாரம்.

### 04. கழிவுகளை வழங்கல்

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் வடமத்திய மாகாண மஹஎல கருத்திட்டத்தின் கீழ் களுகங்கை - மொரகஹகந்தயை இணைக்கும் சுரங்க அகழ்வின் போது அகற்றப்படுகின்ற அகழ்வு மண்கழிவுகள் ( Tunnel Muck ) தற்காலிகமாக வனப்பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்றன.

குறித்த மண்கழிவுகள், நிர்மாணப் பணிகளுக்கு நேரடியாகப் பயன்படுத்த முடியாத கருங்கற்களை அதிகமாகக் கொண்டுள்ளன. சுரங்க நிர்மாணிப்பால் புனரமைப்பு மற்றும் மேம்படுத்த வேண்டியுள்ள இலுக்கும்புர தொடக்கம் லக்கல வரையான 9.3 கிலோ மீற்றர் வீதிப் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காகவும் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 100,000 கிலோ மீற்றர் வீதிப் புனரமைப்புக்குத் தேவையான ABC மூலப்பொருள் ( Aggregate Base Course ) தயாரிப்புக்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் குறித்த கழிவு மூலப்பொருட்களை வழங்க அங்கிகாரம்.

### 05. சட்டகத்தைத் தயாரிக்கும் கருத்திட்டம்

இலங்கை, 1993ஆம் ஆண்டு தொடக்கம் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான சட்டகப்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பங்காளி அரசாக செயற்பட்டு வருவதுடன், 2016ஆம் ஆண்டு பாரிஸ் ஒப்பந்தத்தையும் ஏற்று அங்கிகரித்துள்ளது.

பாரிஸ் ஒப்பந்தத்தின் தேசிய ரீதியான கேந்திர நிலையமாக சுற்றாடல் அமைச்சு செயற்பட்டு வருகின்றது. குறித்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கையில் தேசிய ரீதியாக நிச்சயிக்கப்படும் பங்களிப்புகள் 2021ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பாக சட்டகப்படுத்தப்பட்ட மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் முக்கிய 02 துறைகளாக விவசாயமும் வனாந்தரமும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் முன்னேற்றங்களை வெளிப்படைத்தன்மையுடன் அறிக்கைப்படுத்தல் வேண்டும். அதற்கமைய, விவசாய, வனாந்தரம் மற்றும் ஏனைய காணிப்பயன்பாட்டுத் துறைகளுக்கான வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் சட்டகத்தைத் தயாரிப்பதற்காக உலகளாவிய சுற்றாடல் வசதிகள் நிதியனுசரணையின் கீழ் சுற்றாடல் அமைச்சின் ஆலோசனையுடனும், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிதியத்தின் ஒத்துழைப்புடன் கருத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உலகளாவிய சுற்றாடல் நிதியனுசரணையின் கீழ் 863,242 அமெரிக்க டொலரை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிதியம் உடன்பாடு தெரிவித்துள்ளது. அது தொடர்பிலான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 06. விமானநிலைய 2 ஹோட்டல்கள் நிர்மாணம்

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள ஹம்பாந்தோட்டைப் பிரதேசம், பிரதான சுற்றுலாப் பயணப் பிரதேசமாக இருப்பினும், தற்போது அப்பிரதேசத்தில் ஒரு சில ஹோட்டல்கள் மாத்திரமே காணப்படுகின்றன.

விமான நிலையத்திற்கு அண்மையில் 04 நட்சத்திர அந்தஸ்துள்ள ஹோட்டல்கள் 02 அமைத்து, சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுப்பதன் மூலம் அதிக நன்மைகளைப் பெறலாம் எனக் கண்டறிப்பப்பட்டுள்ளது.

அதற்காக விமான நிலைய முனையக் கட்டடத்தின் வலதுபுறத்தில் அமைந்துள்ள 15 ஹெக்டேயர் காணியில் 02 காணித்துண்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள 02 ஹோட்டல்களை அமைப்பதற்காக முதலீட்டாளர்களிடமிருந்து கருத்திட்ட முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 07. 408 வீட்டு அலகுகள் நிர்மாணம்

வத்தளை, மில்லகஹவத்த பிரதேசத்தில் 408 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய ரீதியான போட்டி விலைமுறிப் பொறிமுறையைப் பின்பற்றி விலைமனு கோரப்பட்டுள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பேச்சுவார்த்தை உடன்பாட்டுக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த ஒப்பந்தத்தை இன்ரநெஷனல் கன்ஸ்ரக்சன் கொன்சோட்டியம் (தனியார்) கம்பனிக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 09. உப மின்நிலையங்களை மேம்படுத்தல்

இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பொருத்தமான ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்காக சர்வதேச போட்டி விலைமுறைப் பொறிமுறையைப் பின்பற்றி விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த ஒப்பந்தத்தை TBEA ஷென்யென் ட்ரான்ஷ்போமர் குறூப் மற்றும் சீலெக்ஸ் இன்ஜினியரிங்க் லிமிட்டட் கூட்டு வர்த்தகத்திற்கு வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. குறித்த பரிந்துரைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் உடன்பாடும் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 10. டீசல் இறக்குமதிக்கான ஒப்பந்தம்

2022.03.01 தொடக்கம் 2022.10.31 வரையான (08) மாதகாலத்திற்கான டீசல் (உயர்ந்தபட்ச சல்பர் 0.05) இறக்குமதி செய்வதற்கான நீண்டகால ஒப்பந்தத்தை வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ள விநியோகத்தர்களிடம் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. குறித்த பெறுகையை கொரல் எனேர்ஜி DMCC நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 11. விநியோகத்திற்கான பெறுகை

நீரிழிவு நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக பயன்படுத்தப்படும் பயிஃபேசிக் அயிசோஃபேன் இன்சுலின் ஊசிமருந்து பிபீ 30/70 மில்லி லீற்றர் வயல்ஸ் ஊசிமருந்தை கொள்வனவு செய்வதற்காக சர்வதேச போட்டி விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. குறைந்த விலைமனுவான இந்தியாவின் Wockhardt Limited நிறுவனத்தின் விலைமனுக் கோரலுக்கு வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த ஊசிமருந்துத் தொகையின் 1.5 மில்லியன்களை மாத்திரம் விநியோகிப்பதற்கான ஒப்பந்தத்தை இந்தியாவின் Wockhardt Limited நிறுவனத்திற்கு வழங்குவதற்கும், எஞ்சிய ஊசிமருந்துகள் 2022 ஆம் ஆண்டின் பயன்பாட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கும் அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 12. முகக்கவசங்கள் 3,000,000

சுவாசத்தொகுதியில் தொற்று ஏற்படுவதைத் தடுப்பதற்காகப் பயன்படுத்தும் நுண்துகள்கள் வடிகட்டி முகக்கவசங்களை கொள்வனவு செய்வதற்கு சர்வதேச போட்டி விலைமுறிகள் கோரப்பட்டுள்ளன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளைக் கவனத்தில் கொண்டு, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவால் குறித்த பெறுகைக் கோரலுக்குரிய விவரங்களுடன் பதிலளித்துள்ள குறைந்த விலைமனுவான லக்கி இன்டஸ்ரீஸ் தனியார் கம்பனிக்கு வழங்குவதற்குப் பரிந்துரைக்கப்பட்டு அமைச்சரவையால் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 13. 360,000 போத்தல்கள் விநியோகம்

பல்வேறுபட்ட நோய் நிலைமைகளால் பீடிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக பயன்படுத்தப்படும் ஹியூமன் அல்பியூமின் திரவ பிபீஃபிஎச் ஈயூஆர், 20மூ, 50 மில்லிலீற்றர் மருந்தைக் கொள்வனவு செய்வதற்காக சுவிட்சர்லாந்தின் M/s Baxalta GmbH நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 14. உரங்களின் பெறுகைக் கோரல்

2022 ஆம் ஆண்டு சிறுபோகச் செய்கைக்காக மதிப்பிடப்பட்டுள்ள பயிர்ச்செய்கைக் காணிகள் 600,000 ஹெக்டேயர்களாகும். அதற்காக உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட சுற்றாடல் நேயம்மிக்க உரப் பெறுகைக்காக 2022 ஜனவரி மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, உள்ளூர் போட்டி விலைமனுப் பொறிமுறையைப் பின்பற்றி விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கைக்காக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சுற்றாடல் நேயமிக்க உரங்களை விநியோகிப்பதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

---

காங்கிரஸ்

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்

# குட்டிக்கரணம் அடித்து போராட்டம்

குட்டிக் கரணம் அடித்து காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கோவில்பட்டியைத் தலைமை இடமாக கொண்டு கோவில்பட்டி, விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி உள்ளடங்கிய புதிய மாவட்டமொன்றை அமைக்க வேண்டும் எனவும், இளையரசனேந்தல் குறுவட்ட த்தினை தென்காசி மாவட்டத்துடன் இணைக்கும் முடிவை அரசு கைவிட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி, காங்கிரஸ் கட்சி வடக்கு மாவட்ட முன்னாள் துணைத் தலைவர் அய்யலுச்சாமி தலைமையில் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் குட்டிக் கரணம் அடித்து நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இப்போராட்டமானது தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன்பாக நடைபெற்றுள்ளது.

---

கர்நாடகா




ஹிஜாப் விவகாரம்:

## தீர்ப்பால் பரபரப்பு

கர்நாடகாவிலுள்ள உடுப்பி அரசு மகளிர் பல்கலைக்கழகத்தில், ஆறு முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணிந்து வகுப்பிற்கு வருகை தந்ததால் அம்மாணவிகளை அப் பல்கலைக்கழக நிர்வாகம் அண்மையில் வெளியேற்றியது.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தவே கல்லூரி நிர்வாகத்தைக் எதிர்த்து மாணவியர் சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்நிலையில் நேற்றைய தினம் (15) இவ் வழக்கின் தீர்ப்பை கர்நாடக நீதிமன்றம் வெளியிட்டது.

அந்தவகையில் “ஹிஜாப் அணிவது இஸ்லாமிய சட்டத்தில் அவசியமானது இல்லை எனவும், கல்வி நிலையங்களில் ஹிஜாப் அணிந்து வருவதற்கு விதிக்கப்பட்ட தடை செல்லுபடியாகும்” எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

---

பஞ்சாப்

துப்பாக்கிச் சூட்டில்

## பிரபல கபடி வீரர் மரணம்

பஞ்சாப்பின் நகோதர் பகுதியில் உள்ள மைதானத்திற்குள் புகுந்த மர்ம கும்பலொன்று திடீரென அங்கிருந்த பிரபல கபடி வீரரான சந்திப் சிங் என்பவர் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம்(14) இடம்பெற்ற இத்துப்பாக்கிச் சூட்டில் சந்தீப் சிங்கின் உடலில் 10 தோட்டாக்கள் வரை பாய்ந்துள்ள நிலையில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.



இங்கிலாந்தில் குடியேறியுள்ள சந்திப் சிங், தனது சொந்த ஊரில் கபடி போட்டிகளை நடத்தி வந்த நிலையிலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

ஆந்திரா



## கொடிய விசம் கொண்ட அரியவகை மீன்

கிழக்கு கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களின் வலையில் நேற்று முன்தினம் (14) பலூன் மீன் ( puffer fish ) என்றழைக்கப்படும் அரிய வகை மீனினம் சிக்கியுள்ளது.

எனினும் குறித்த மீனை மீனவர்கள் மீண்டும் கடலில் விட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இது குறித்து வெளியான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றது.

இம் மீனானது கொடிய விசத்தை கக்கும் தன்மை உடையது என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

இந்தியா

விமான நிலையத்தில் கத்தியைப் பயன்படுத்த

## சீக்கியர்களுக்கு அனுமதி

சிக்கியர்கள் தங்கள் மத நம்பிக்கையின்படி ‘கிர்பான்’ எனப்படும் வளைந்த கத்தியை தம்மோடு வைத்திருப்பது வழக்கம்.

எனினும் அண்மையில் இந்திய விமானப் போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் சீக்கிய ஊழியர்கள் எந்தவோர் இந்திய விமான நிலைய வளாகத்திலும் கிர்பானை எடுத்துச் செல்ல முடியாது என கடந்த 4ஆம் திகதி விமானப் போக்குவரத்து பாதுகாப்பு அலுவலகம் தடை விதித்தது.

இவ் உத்தரவுக்கு முன்னணி சீக்கிய அமைப்பான ஷிரோமணி குருத்வாரா பர்பந்தக் சபையினர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், 12ஆம் திகதி அத் தடை நீக்கப்பட்டிருக்கிறது.

இதனையடுத்து மார்ச் 4 ஆம் திகதி வெளியிடப்பட்ட உத்தரவில், கிர்பானை சீக்கியப் பயணிகள் மட்டுமே எடுத்துச் செல்ல முடியும் எனவும், அந்தக் கத்தியின் மொத்த நீளம் 9 அங்குலத்திற்கு மேற்படாமலும்,



கூர்மையான பிளேடின் நீளம் 6 அங்குலத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் இந்தியாவிற்குள் இந்திய விமானங்களில் பயணிக்கும் போது மட்டும் கிர்பான் அனுமதிக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் “சீக்கிய பயணிகளுக்கு மட்டுமே இந்த விதிவிலக்கு அளிக்கப்படுவதாகவும், ஆனால் விமான நிலையத்தின் உள்நாட்டு அல்லது சர்வதேச முனையத்தில் பணிபுரியும் சீக்கியர் உட்பட அனைத்து ஊழியர்களும் கிர்பானை கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்” என்றும் கூறப்பட்டிருந்தது.

---

காஷ்மீர்

# திரைப்படம் பார்ப்பதற்கு

## பொலிஸாருக்கு விடுமுறை

இரசிகர்களின் மிகுந்த எதிர்ப்பார்ப்புக்கு மத்தியில் விவேக் அக்னிகோத்ரி இயக்கத்தில் ‘தி காஷ்மீர் பைல்ஸ்’ என்ற பொலிவூட் திரைப்படம் கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியானது.

இத் திரைப்படமானது, காஷ்மீர் கிளர்ச்சியின் போது காஷ்மீரிய இந்துக்கள் காஷ்மீரத்தை விட்டு வெளியேறியதை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




மேலும் இப்படத்தில் மிதுன் சக்கரவர்த்தி, அனுபம் கெர், தர்ஷன் குமார், பல்லவி ஜோஷி, சின்மயி மண்டலேகர், பிரகாஷ் பெலவாடி, புனித் இஸ்ஸார் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இப் படத்துக்கு அரியானா, குஜராத், கர்நாடகா மாநிலங்களில் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் மத்திய பிரதேச பொலிஸார் இத்திரைப்படத்தைப் பார்ப்பதற்கு தாங்கள் விரும்பும் நாளில் விடுப்பு எடுத்துக்கொள்ளலாம் என்று அம்மாநில உள்ளூராட்சித் துறை அமைச்சர் நரோத்தம் மிஸ்ரா நேற்று (15) அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உக்ரேன்

# உக்ரேனுக்கு ஆதரவு தெரிவித்த

## செய்தியாளர் கைது

உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 24 ஆம் திகதி முதல் தீவிரமாகத் தாக்குதல் நடத்தி வருவதால், ரஷ்யா மீது அமெரிக்கா, பிரித்தானிய உள்ளிட்ட பல நாடுகள் அடுக்கடுக்கான பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றன.




இந்நிலையில் ரஷ்யாவில் செய்தி நேரலையின் போது உக்ரேன் மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக பதாகையுடன் வந்த செய்தியாளரை பொலிஸார் கைது செய்துள்ள சம்பவம் உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மரியா ஓவ்சியனிகோவா என்ற பெண் செய்தியாளரே 'உக்ரேன் மீதான போர், ஒரு குற்றம்; பொய் பிரசாரங்களை மக்கள் நம்ப வேண்டாம். ரஷ்யர்களே! போருக்கு எதிராக உள்ளனர்' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகையுடன் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அரசுக்கு எதிராக செயற்பட்டதாக மொஸ்கோ நகர பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.



ஆர்ஜென்டினா

# 22 ஆண்டுகள் காரிலேயே உலகை சுற்றிய குடும்பம்

ஆர்ஜென்டினாவில் 2000 ஆம் ஆண்டில் உலகை சுற்றி வருவதற்காக தொடங்கிய பயணத்தை 22 ஆண்டுகளுக்கு பின்னர் முடித்துக்கொண்டு, தாய்நாடு திரும்பிய ஒரு குடும்பத்துக்கு மக்கள் உற்சாக வரவேற்பு அளித்து வருகின்றனர்.

ஹெர்மன் - கேன்டெலாரியா என்ற தம்பதியே இவ்வாறு அர்ஜென்டினாவின் தலைநகர் பியூனோஸ் அயர்ஸில் இருந்து உலகைச் சுற்றிவரும் பயணத்தை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 102 நாடுகளில் பயணம் செய்த அவர்கள், சுமார் 3 லட்சத்து 62 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தை கடந்து வந்துள்ளதாகவும், பயணத்தின் ஆரம்பத்தில் அலாஸ்காவுக்கு சென்ற அந்த தம்பதி,அங்கு 1928ஆம் ஆண்டு மாடல் கிரஹாம் பெய்ஜ் (Graham-Paige) எனும் காரை வாங்கி அங்கிருந்து காரிலேயே பயணம் செய்யத் தொடங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவர்கள் இப்பயணத்தின் போதே நான்கு குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளனர் எனவும், பயணம் சென்ற நாடுகளில் பெரும்பாலும் வீடுகளில் விருந்தினர்களாகத் தங்கியிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இணையவழி மூலம் அவர்களது பிள்ளைகள் கல்வி கற்றதாகவும் பயண அனுபவங்களை புத்தகமாக வெளியிட்டுள்ளதாகவும் அத்தம்பதியினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வொஷிங்டன்

# புட்டினுக்கு மஸ்க் சவால்



அமெரிக்க மின்சார வாகன உற்பத்தி நிறுவனமான டெஸ்லாவின் தலைமை நிர்வாக அதிகாரியும் விண்வெளி நிறுவனமான ஸ்பேஸ்எக்ஸின் நிறுவனருமான எலோன் மஸ்க், ரஷிய இராணுவத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட உக்ரேனில் ஸ்டார்லிங்க் இணையச் சேவையை செயற்படுத்துதல் மற்றும் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இணைப்பைக் கொண்டுவர உதவும் உபகரணங்களை அனுப்பி வைத்தார்.

இந்நிலையில், ரஷிய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு, எலோன் மஸ்க், நேற்று முன்தினம் (14) சவால் ஒன்றை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் ரஷிய மொழியில், 'இதன் மூலம் நான் விளாடிமிர் புட்டினுக்கு ஒற்றைப் போருக்கு சவால் விடுகிறேன். இந்த சண்டையை ஏற்றுக்கொள்கிறாரா' என்று டுவிட் செய்துள்ளார்.

இந்த டுவீட் குறித்து ரஷிய தரப்பில் இருந்து இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை.

சீனா

### 6,000 படுக்கைகளை கொண்ட வைத்தியசாலை

# 6 நாள்களில் நிர்மாணம்

சீனாவின் யூகான் மாகாணத்தில் 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டது. இந்த வைரஸ் உலகம் முழுவதும் பரவி இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். தற்போது கொரோனா பரவல் படிப்படியாக குறைந்து, மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி வருகின்றனர்.

இந்நிலையில் சீனாவில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதன்காரணமாக தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் வகையில், அந்நாட்டு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி கொரோனா வைரஸ் பரவல் அதிகமாக இருக்கும் இடங்களில் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு வருகிறது.

ஜில்லின் நகரில் 6,000 படுக்கை வசதிகள் கொண்ட பிரம்மாண்ட வைத்தியசாலை ஆறு நாளில் கட்டி முடிக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. ஏற்கெனவே மூன்று மருத்துவமனைகள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், அங்கு நோயாளிகள் பலர் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



நியூயோர்க்

# ஆசிய பெண்ணின் மீது 125 முறை தாக்குதல்



அமெரிக்காவில் ஆசியப் பெண்ணொருவரை நபரொருவர் 125 முறை தாக்கிய சம்பவம் பெரும் பரப்பரப்பையும் சர்ச்சையும் ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் யான்கர்ஸ் எனும் பகுதியில், 67 வயதான ஆசியப் பெண்ணொருவரை, பின்தொடர்ந்து சென்ற 42 வயதான டம்மால் எஸ்கோ என்ற அமெரிக்கர், அப்பெண் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளார்.

வயது முதிர்ந்தவர் என்றும்கூட பாராமல், அப்பெண்ணை 125 முறை தாக்கியுள்ளார். இந்தக் காட்சிகள் அனைத்தும் அங்கிருந்த சி.சி.டி.வி கெமராவில் பதிவாகி உள்ளன. இதன் அடிப்படையில் எஸ்கோ தற்போது கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இந்தச் சம்பவம் குறித்து நியூயோர்க் சிட்டி பொலிஸார், "ஆசியப் பெண்ணுக்கு நடந்தது கொடூரமான, இன வெறுப்புக் குற்றம். இது நாங்கள் பார்த்த மிக பயங்கரமான தாக்குதல்களில் ஒன்றாகும். ஆதரவற்ற ஒரு பெண்ணை அடிப்பது வெறுக்கத்தக்கது. அவரது இனத்தின் காரணமாகவே, அவர் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறார். கைது செய்யப்பட்டவர் மீது கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவித்தனர்.

அப்பெண்ணுக்கு முகத்தில் எலும்பு முறிவும் மூளையில் இரத்த கசிவும் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை யான்கர் நகர மேயர் மைக் ஸ்பேனோவும் கண்டித்துள்ளார். இதுகுறித்து மைக் ஸ்பேனோ தெரிவிக்கையில், "குற்றஞ்சட்டப்பட்டவருக்கு சட்டத்திற்கு உட்பட்டு தண்டனை வழங்கப்படும் என்று நம்புகிறோம். பாதிக்கப்பட்ட பெண்ணோடும், அவரது குடும்பத்தினரோடும் நாங்கள் இருக்கிறோம்" என்று தெரிவித்தார்.

### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் சிற்றி - பலஸ் போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், கிறிஸ்டல் பலஸின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், நடப்புச் சம்பியன்கள் மன்செஸ்டர் சிற்றிக்கும் இடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

அந்தவகையில், பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 70 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் சிற்றி காணப்படுகின்றது. ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள லிவர்பூலும், செல்சியும் முறையே 66, 59 புள்ளிகளுடன் இரண்டாம், மூன்றாமிடங்களிலுள்ளன. மூன்று போட்டிகள் குறைவாக விளையுள்ள ஆர்சனல், 51 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் உள்ளது.







### மருதூர் பிறீமியர் லீக்:

# காலிறுதியில் கல்முனை டொப்ரேங் வி. க

அஸ்ஹர் இப்றாஹீம்

சாய்ந்தமருது கிரிக்கட் சம்மேளனம் ஒழுங்கு செய்து நடாத்திக் கொண்டிருக்கும் கடினபந்து கிரிக்கெட் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு கல்முனை டொப்ரேங் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றுள்ளது.

15 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட 32 விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்கும் இத்தொடரில், சாய்ந்தமருது பொலிவேரியன் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற நிந்தவூர் லகான்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கெதிரான போட்டியில் வென்றே டொப்ரேங்க் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற டொப்ரேங்க் முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய நிந்தவூர் லகான்ஸ் விளையாட்டுக் கழகம் 15 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு, 98 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டொப்ரேங்க், 14.4 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக, டொப்ரேங்க் விளையாட்டுக் கழகத்தின் முஹம்மட் சிரோஸ் தெரிவு செய்யப்பட்டார்.

ஏற்கெனவே, காலிறுதிப் போட்டிக்கு கல்முனை லெஜன்ஸ் விளையாட்டுக் கழகம், கல்முனை ஜிம்கானா விளையாட்டுக் கழகம், சம்மாந்துறை விளையாட்டுக் கழகம், சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம் ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிக்கு ஓய்வுபெற்ற சிரேஸ்ட ஆசிரியர் எம்.ஐ.எம். அஸ்ஹர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்

# யுனைட்டெட்டுக்குச் செல்கிறாரா கேன்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முன்களவீரரான ஹரி கேனை, இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் கைச்சாத்திட முயல்வதாகத் தெரிகிறது.

28 வயதான கேன், கிண்ணங்களை வெல்லும் கழகமொன்றையே விரும்புகின்றபோதும், யுனைட்டெட்டுக்கு முகாமையாளராக பிரெஞ்சு லீக் 1 கழகமான மௌரிசியோ பொச்செட்டினோ வருமிடத்து, தனது முன்னாள் முகாமையாளருடன் இணைய விரும்புகின்றார் எனக் கருதப்படுகிறது.

கடந்த 2009ஆம் ஆண்டு முதல் டொட்டென்ஹாமுக்காக விளையாடும் கேன், 268 போட்டிகளில் 177 கோல்களைப் பெற்றுள்ளார்.




### மேற்கிந்தியத் தீவுகள் எதிர் இங்கிலாந்து:

# இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பிக்கிறது

மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியானது பார்படோஸில் இலங்கை நேரப்படி இன்றிரவு 7.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

முதலாவது போட்டியானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த நிலையில், தொடரின் போக்கைத் தீர்மானிக்கும் போட்டியாக இப்போட்டி அமையவுள்ளது.

ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்டுவர்ட் ப்ரோட் இல்லாத நிலையில் கவனம் பெற்ற இங்கிலாந்தின் பந்துவீச்சு வரிசையானது தற்போது காயம் காரணமாக மார்க் வூட்டையும் இழந்த நிலையில் மேலும் கவனம் பெறுகின்றது. வூட்டுக்குப் பதிலாக சஹிப் மஹ்மூட் அல்லது ஒலி றொபின்ஸன் களமிறங்கக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

மேற்கிந்தியத் தீவுகள் அணியில் மாற்றமிருக்காதெனக் கருதப்படுகின்றது.





### அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# போராடும் பாகிஸ்தான்

அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் பாகிஸ்தான் போராடி வருகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட தொடரில், கராச்சியில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 81 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த அவுஸ்திரேலியா, 2 விக்கெட்டுகளை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இனிங்ஸை இடைநிறுத்தியது. மர்னுஸ் லபுஷைன் 44, உஸ்மான் கவாஜா ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களைப் பெற்றனர். ஷகீன் ஷா அஃப்ரிடி, ஹஸன் அலி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், 506 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் பாகிஸ்தான், நேற்றைய நான்காம் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், அணித்தலைவர் பாபர் அஸாம் 102, அப்துல்லா ஷஃபிக் 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர். நேதன் லையன், கமரொன் கிறீன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் புதன்கிழமை, 16 மார்ச் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.